# காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்)

மதீனமா நகரில் ஓரிரவு காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் தம் வணக்கங்களையெல்லாம் முடித்து விட்டு அயர்ந்து படுத்துறங்கு கிறார்கள். அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் திருத்தோழர் களுடன் காட்சி வழங்கி, ''முயீனுத்தீனே! குத்புத்தீன் அல்லாஹ்வின் அருள்நேசர். அவருக்கு தீட்சை நல்கி, கிர்க்காவை அணிவிப்பீராக!'' என்று அமுதவாய் விண்டு மறைந்தனர். இவ்வாறு ஒரு நாளல்ல, நாற்பது நாட்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தது.

இதன்பின் ஓரிரவு இறைவனே அவர்களின் கனவில் திருக்காட்சி வழங்கி, ''முயீனுத்தீனே! குத்புத்தீனுக்கு தீட்சை வழங்கி, கிர்க்காவையும் அணிவிப்பீராக! அவர் நம்முடைய நேசர் மட்டுமின்றி, என் அருள்நேசர் முஹம்மதுவின் திருநேசருமாவார்'' என்று பணித்து மறைந்தான்.

இதற்குமேல் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுக்கு ஒரு நிலைக்கொள்ளவில்லை. அவர்களின் கால்கள் அவர்களை பக்தாது மாநகரத்திற்கு இழுத்துச் சென்றன. என்ன வியப்பு! அங்குக் குத்புத்தீனைக் கண்டதும், காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு மட்டில்லை. கார் பெற்ற தோகையெனக் களிப்பெய்தினர். அவர்களை அன்புடன் ஆரத்தழுவி, விண்ணை முட்.டும் மனாராக்களுடன் கம்பீரமாகத் தோற்றம் வழங்கிய காஜா அபுல் லைஸ் ஸமர்க்கந்தியின் பள்ளி வாயிலுக்கு அழைத்துச் சென்று, ஷைகு ஷஹாபுத்தீன் (ரஹ்), ஷைகு தாவூத் கிர்மானி (ரஹ்), ஷைகு புர்ஹானுத்தீன் முஹம்மது சிஷ்தி (ரஹ்), ஷைகு தாஜுத்தீன் முஹம்மது இஸ்ஃபஹானி(ரஹ்) ஆகியோரின் முன்னிலையில், அவர்களுக்கு தீட்சை நல்கி, கிர்க்கா அணிவித்து, அவர் களின் தலைமீது நாற்கோணமுள்ள, தொப்பியாம் தர்வேஷ்களின் மணிமகுடத்தையும் சூட்டினார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 586-ஆம் ஆண்டிலாகும். அப்பொழுது குத்புத்தீனுக்கு வயது பதினேழு.

ஈரான் நாட்டில் மாவுராந் நஹ்ர் மாநிலத்தில், ஔஷ் என்னும் சிற்றூர் உள்ளது. அங்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருமைப் பேரர் ஹுஸைன் (ரலி) அவர்களின் வழிவந்த ஸையிது கமாலுத்தீன் என்னும் பெரியார், அருமறை நெறியும், வணக்கமும், கொடையும் ஒருங்கே வாய்க்கப் பெற்று வாழ்ந்து வந்தார். அவரின் மனைவியும் தரும நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற மாதரசியாக இலங்கினார். திருக்குர்ஆனின் பதினைந்து ஜுஸ்உகளை மனனம் செய்திருந்த அவர், அடுக்களை அலுவல் செய்து கொண்டிருக்கும் பொழுதும், வேறு நேரங்களிலும், அவற்றைத் திரும்பத் திரும்ப ஓதி வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்.

தாம் கருவுற்றதை உணர்ந்த அம் மங்கை நல்லார், தம் மணிவயிற்றில் உற்பத்தியாகி இருக்கும் மகவு, ஒரு மாமகனாக விளங்க வேண்டும் என்று, இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சி வந்தார்.

சில மாதங்கள் உருண்டோடின. ஓரிரவு அவர் அயர்ந்து படுத்துறங்கும் பொழுது வயிற்றினுள் ஏதோ ஒன்று அசைவது போன்ற உணர்வு, அவருக்கு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து, 'யா அல்லாஹ், யா அல்லாஹ்' என்று எவரோ ஒருவர் இறைவனை மெல்லிய தொனியில் துதிப்பது போன்றும் கேட்டது. தம் அருகில் படுத்திருந்த கணவரை எழுப்பி செய்தியை எடுத்துரைக்க, அவரும் வியப்பு மேலிட்டவராய், தம் காதை அவரின் வயிற்றில் வைத்துக் கேட்டார். ஆம்; எவரோ இறை துதிபாடும் இன்குரல் தான் அது. யார் அவர்? சுற்று முற்றும் பார்த்தார். ஒருவரும் இல்லை. சரிதான். தமக்குப் பிறக்கப் போகும் மாமகனின் 'திக்ர்' ஒலிதான் அது என்ற முடிவுக்கு வந்தார் அவர்.

கர்ப்பம் மலர்வதற்கான சமயமும் வந்து சேர்ந்தது. அன்னை ஒரு கனவு கண்டு திடுக்குற்று விழித்தெழுந்தார். என்ன வியப்பு! இல்லினில் ஓர் ஒளிப் பிழம்பு தோன்றி விண்ணை முட்ட உயர்ந்து நின்றது. அதன் பேரழகைக் காண, ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டுமாப் போல் இருந்தது.

அது கண்ட அன்னை சுஜூதிலே விழுந்து, ''இறைவ எம் பெரும! இதன் மறை பொருள் யாதென யான் அறியேன். நன்மையெனில், எனக்கு அறிவித்தருள்வாயாக! தீமை எனில் அதை விட்டும் என்னைக் காத்தருள் புரிவாயாக!'' என்று இறைஞ்சினார். அப்பொழுது அசரீரி ஒன்று, ''உன் மணி வயிற்றில் ஒரு மாமகன் பிறக்கப் போகிறார். அதன் காரணமாகவே இப்பேரொளி நாலா பக்கங்களிலும் பரவி, விண்ணைமுட்ட உயர்ந்து நிற்கிறது'' என்று முழங்கியது.



இவ்வாறு அசரீரி முழங்கிச் சில கணமே ஆயின. கர்ப்பமே முதிர்ந்து பிள்ளைக் கனி மண்ணிலே வந்து விழுந்தது. குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், 'திக்ர்' செய்தவர்களாய், மாநிலம் தோன்றிவிட்டார்கள். அடுத்தகணம் அவர்களின் நெற்றி தரையைத் தொட்டு இறைவனுக்கு சுஜூது செய்தது -நன்றிப் பெருக்கால்.

தம் அருமை மகன் நல்லதொரு விதிவாய்க்கப் பெற்று, நானிலம் புகழ வாழ வேண்டுமென்ற பேரவாவின் காரணமாக, அவர்களுக்கு நல்லூழ் வாய்க்கப்பெற்றவர் என்றுபொருள்படும் 'பக்தியார்' என்ற நற்பெயரைச் சூட்டினார்கள் பெற்றோர்கள். ஆனால், இறைவனோ, அவர்கள் மார்க்கத்தின் ஆணிமுனையாக இருக்க வேண்டுமென்று நாடி, அவர்களுக்குக் குத்புத்தீன் என்னும் அழகு சால் பெயரிட்டு மகிழ்ந்தான். முஸ்லிம் பெருங்குடி மக்களோ, அவ் இரு பெயர்களையும் ஒன்றிணைத்து, அத்துடன் காக்கி என்ற மற்றொரு புகழ்ப் பெயரையும் சேர்த்து, 'குத்புத்தீன் பக்தியார் காக்கி' என்று வாய் இனிக்க, உளம் இனிக்க அவர்களை அழைத்து பூரிப்பெய்தினர்.

தம் சின்னஞ்சிறு அருமை மகனுடன் கொஞ்சிக் குலாவி, குதூகலித்து மகிழ்ந்து வந்தார் ஸையிது கமாலுத்தீன். ஆனால் அந்தக் குதூகலம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. தன் நேசர் குத்புத்தீன், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றியவராக, ஆதிமுதல் இருக்கவேண்டுமென்று விரும்பிய இறைவன், அவர் ஒன்றரை வயதுப் பாலகராக இருக்கும்பொழுதே, அவரின் தந்தையைத் தன்பால் அழைத்துக் கொண்டான்.

சின்னஞ்சிறு வயதிலேயே, தன்னந்தனியாக அநாதையாக விடப்பட்ட அச் சிறுவரை, அன்னை அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தார். தம் கணவரை இழந்த துக்கத்தைத் தம் சிறுமகனின் அழகுத் திருமுகத்தைக் காண்பதிலேயே ஓரளவு ஆறுதல் எய்தி வந்தார் நங்கை. மகன் குத்புத்தீன் நான்காண்டுகளைக் கடந்து, நான்கு மாதங்களை எட்டிப்பிடித்த ஒருநாள், ஔஷ் கிராமமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தது. காரணம், காஜா-யெ-காஜா கான் முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், தம் சுற்றுப் பிரயாணத்தின்போது அவ் ஊருக்கு எழுந்தருளியதே யாகும். அது கண்டு அவ் ஊர் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கோர் மட்டில்லை. பெறற்கரிய பேறு பெற்றதாகப் பெருமகிழ்வெய்தினார்கள் அவர்கள்.

இச் செய்தி குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் அன்னையின் செவிப் பட்டதும் அவரின் மூளை வேகமாக வேலை செய்தது. தம் குலம் தழைக்க வந்த கோமகனை, ஆண்டகை பால் அழைத்துச் சென்று, ''அடிகளாரே!

என் மகனாம் இச்சிறுவருக்குக் கல்வியைத் துவக்கி அருள்வீராக!'' என்று வேண்டி நின்றார். அதற்கு அடிகளாரும் ஒப்பி, பலகையை வாங்கி எழுதத் துவங்கினார்கள். அப்பொழுது ''முயீனுத்தீனே! எழுதாதீர். நில்லும்'' என்று அசரீரி முழங்கியதைக் கேட்டதும், எழுதச் சென்ற கை அப்படியே நின்றுவிட்டது. யாது காரணம் என அறியாது, வியப்பும், திகைப்பும் அடைந்தார்கள் ஆண்டகை.

மீண்டும் அசரீரி முழங்கியது :

''முயீனுத்தினே! அவருக்குத் திருக்குர்ஆனையும், மார்க்க சட்ட திட்டங்களையும் கற்பிக்கும் பொறுப்பு ஹமீதுத்தீன் நாகூரிக்கென ஏற்கனவேயே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. உமக்கு, அவருக்கு ஆன்மீகக் கல்வியைப் போதிக்கும் அலுவல் விதிக்கப்பட்டுள்ளது. அவர் உம்முடைய ஆன்மீக மகனாக விளங்குவார்.''

அடுத்த கணம் 'ஸலாம்' உரைத்த வண்ணம் ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள் அங்கு வருகை தந்ததும், அவர்களை எழுந்து நின்று வரவேற்று உபசரித்தனர் முயீனுத்தின் சிஷ்தி (ரஹ்) அவர்கள். அதன்பின் பலகையை வாங்கி எழுதத் துவங்கிய ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள், சிறுவர் குத்புத்தீனை நோக்கி, ''எதை முதலில் எழுத நீர் விரும்புகிறீர்?'' என்று வினவ, சிறுவர் தம் பிஞ்சு வாய்திறந்து 'சுப்ஹானல்லதீ' என்று துவங்கும் திருக்குர்ஆனின் 16-ஆவது அத்தியாயத்தைக் கூறினர்.

அதுகேட்டு வியப்பு மீக்குற்ற ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள், ''என்ன! அதற்கு முன்னால் உள்ள அத்தியாயங்களெல்லாம் உமக்குத் தெரியுமோ?'' என்று வினவினார்.

அதற்குச் சிறுவர், ''ஆம்! நான் கருவிலிருக்கும் பொழுதே அவற்றை என் அன்னை ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்ததில், அவை எனக்கு மனனம் ஆகிவிட்டன'' என்று புன்சிரிப்புடன் கூறினர்.

''அப்படியா! நீர் கருவிலேயே திருவாய்க்கப் பெற்றவர். அல்லாஹ்வின் அருளுக்கு பாத்திரமான நேசர்'' என்று கூறி, திருக்குர் ஆனின் 16-வது அத்தியாயத்திலிருந்து, அவர்களுக்கு ஓதிக் கொடுத்தனர். நான்கே நாட்களில் அவர்கள் திருக்குர்ஆன் முழுவதையும் ஓதி முடித்துவிட்டார்கள்.*

* மற்றொரு வரலாறு பின் வருமாறு கூறுகிறது :

அவர்களின் அன்னை, தம் அடிமையிடம் அவர்களை அந்த மஹல்லாவில் இருந்த ஆசிரியரிடம் அழைத்துச் சென்று ஓதவிட்டு வருமாறு கூறினார். அவ்விதமே



இதன்பின் அவர்களுடைய நேரம் இறை வணக்கத்திலும், தியானத்திலுமே கழிந்து வந்தது. வயது ஏற, ஏற அவர்களுக்கு ஆன்மீகப் பசி அதிகரிக்கத் தொடங்கியது. தகுந்த ஞானாசிரியரைக் கண்டு அவர் களிடம் தீட்சை பெற விரும்பிய அவர்கள், தம் அன்னையிடம், தம் வேணவாவை எடுத்துரைத்து, தாம் பக்தாது செல்ல விரும்புவதைக் கூறினர். ''நல்லது, மகனே! சென்றுவா'' என்று தம் மகனை ஆசீர்வதித்து அனுப்பினார் அன்னை. அவர்களின் கால்கள், அவர்களை விறுவிறு வென பக்தாது மாநகரம் இழுத்துச் சென்றன. அப்பொழுதுதான், நாம் துவக்கத்தில் கூறிய சம்பவம் நிகழ்ந்தது. பாலும் தேனும் கலந்தது போன்ற பான்மையை அவர்கள் இருவரும்-ஆசிரியரும் மாணவரும்-எய்தப் பெற்றார்கள்.

'பைஅத்' பெற்ற பின், குத்புத்தீன் பக்தியாரி (ரஹ்) அவர்களின் வாழ்க்கையிலே பெரும் மாறுதல் ஏற்பட்டது. பல்வேறு ஊர்களிலும் சுற்றித்திரிந்து, பல்வேறு பெரியார்களைச் சந்தித்தார்கள். அவர்கள் கஜ்னி சென்ற பொழுது, அங்கு ஒரு பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவருக்கு ஒவ்வொரு நாளும் காணிக்கைகள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. அவற்றை அவர் அன்று பொழுது படுவதற்கு முன் மக்களுக்கு வாரி வழங்கி முடித்துவிட்டே மறுவேலை பார்ப்பது அவரின் வழக்கமாக இருந்து வந்தது. அவரின் வளவாழ்வும், வள்ளன்மையும் கோடிச் செல்வரும் கண்டு பொறாமையுறும் வண்ணம் இருந்தன. ஆனால் அவரோ, தம் முன் கொண்டு வந்து மலை மலையாகக் குவிக்கப்படும் பொருள்களை ஒரு துரும்பாகக் கூட மதிக்காத, முற்றும் துறந்த முனிவராக இருந்தார். அவரின் இந்த முற்றும் துறந்த நிலையே அவருக்கு மாபெரும் மதிப்பை மக்களிடையே வழங்கி வந்தது.

ஒருநாள் அவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''நான் நாற்பதாண்டுகளாகக் கடும் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தேன். எனினும் என் உள்ளம் வெளிச்சம் பெறவில்லை. பின்னர் ஊண், உறக்கம், வீண் பேச்சு ஆகியவற்றைக் குறைத்து, தனிமையில் அமர்ந்து இறைத் தியானத்தில் ஈடுபட்டேன். என் உள்ளத்தில் உண்மை ஒளி உருவாயிற்று. என் அகக்கண் வெளிச்சம் பெற்றது. அண்டகோளங்கள் அனைத்திலும்

அந்த அடிமை அவர்களை அழைத்துச் செல்ல, வழியில் ஒரு பெரியார் குறுக்கிட்டு, "அந்த ஆசிரியரிடம் அவரை அழைத்துச் செல்ல வேண்டாம். மௌலானா அபா ஹஃப்ஸிடம் நான் அவரை அழைத்துச் சென்று ஓதிக்கொடுக்குமாறு பரிந்துரைக்கிறேன்" என்று கூறி, மௌலானா அபா ஹஃப்ஸிடம் அழைத்துச் சென்று, அவர்களுக்கு ஓதிக் கொடுக்குமாறு கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அவர் சென்றபின் மௌலானா அபா ஹஃப்ஸ், அந்த அடிமையை நோக்கி 'அந்தப் பெரியார் எவரென உனக்குத் தெரியுமா' என்று வினவ, 'தெரியாது' என்றான். அவர்களே கிள்ரு (அலை) என்றனர் மௌலானா அபா ஹஃப்ஸ்.

உள்ள பொருள்கள் அனைத்தும் என் முகக்கண் முன் பளிச்சிடலாயிற்று'' என்று கூறினார். அதுகேட்டு குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

இதன்பின் அப்பெரியாரிடமிருந்து விடைபெற்று, மீண்டும் தம் பயணத்தைத் தொடங்கிய குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், மீண்டும் ஒரு பெரியாரைச் சந்திக்கும் பேற்றினைப் பெற்றார்கள். அவரோ நடமாடும் எலும்புக்கூடென மெலிந்து காணப் பெற்றார். தமக்கு வரும் காணிக்கைப் பொருள்களையெல்லாம் 'ளுஹர்' வேளைக்கு முன் தம்மிடம் வரும் ஏழைகளுக்கு அறம் செய்துவிட்டே, அவர் தொழச் செல்வார். தடுக்கப் பட்ட ஐந்து நாட்களைத் தவிர்த்து, ஆண்டு முழுவதும் நோன்பு நோற்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்த அவரோ, நோன்பு திறக்கப் பயன் படுத்துவது நான்கே நான்கு பேரீத்தம் பழங்கள் தாம். அதன்பின் அவர் யாதொன்றையும் உண்பதில்லை.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் அவரை அடைந்த பொழுது, அவர்களின் மாண்பினை உணர்ந்து, அவர்கள் மீது அன்பு செலுத்திய அவர், தாம் நோன்பு திறக்கும் பொழுது, அவர்களும் அருகிருப்பின், அவர்களுக்கு இரண்டு பேரீத்தம் பழங்களைக் கொடுத்துவிட்டு, மற்ற இரண்டு பேரீத்தங்களைக் கொண்டு நோன்பு திறந்து தம் பசி தீர்த்துக் கொள்வார்.

ஒருநாள் அவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''இளைஞரே! நீர் ஆன்மீகத் துறையில் உச்ச நிலையை எய்தவிரும்பின், ஊண், உறக்கம், பேச்சு ஆகியவற்றைக் குறைத்துக் கொள்வீராக!'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

முன்னவர் கூறிய அறிவுரையும் பின்னவர் கூறிய அறப்போதமும் ஒன்றே போல் இருப்பதைக் கண்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அவையே இறைவன் அவர்கள் மூலமாகத் தமக்களித்த தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றத் துவங்கினர்.

இதன்பின் இல்லம் திரும்பிய அவர்கள், ஊண், உறக்கம் ஆகிய வற்றைக் குறைத்துத் தனித்திருந்து, இறைவனை வழுத்திக் கொண் டிருந்தார்கள். நாளொன்றுக்கு 96 'ரகஅத்' நஃபில் தொழுகை தொழு வதையும், 3000 தடவை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது 'ஸலவாத்' ஓதுவதையும் அவர்கள் தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டனர். அவர்களின் ஆன்மீக உயர்வைவக் கண்ட பலர், அவர்களை அணுகி, அவர்களின் கரம் பற்றி தீட்சை பெற்றனர். தம் பதினேழாவது வயதில் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களிடம் தீட்சை பெற்ற அவர்கள், தம் இருபதாம் வயதில் பலருக்கும் தீட்சை வழங்கும் ஆன்மீக ஆசானாகும் உயரிய படித்தரத்தை எய்தப் பெற்றனர்.



ஒரு நாள் அன்னை தம் அருமை மகனை அணுகி, ''மகனே! எனக்கோ வயதாகிறது. நான் என் கண்களை மூடுமுன், நான் உன்னை மணக் கோலத்தில் காண விழைகிறேன். உன்னை ஈன்றெடுத்த என் வயிற்றில் பால் வார்த்தது போன்று, ஒரு சொல் கூறி ஒப்புதல் வழங்கு. மற்ற அனைத்தையும் நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கூறினார்.

அன்னையின் சொல்லுக்கு மாறு சொல்ல விரும்பாது, தனயர் 'சரி' என்று கூறியதும், திருமண அலுவல்கள் மடமடவென்று நிகழத் துவங் கின. குறித்த நாள் அன்று திருமணமும் நன்முறையில் நடந்தேறியது.

மணாளர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் மனையாளுடன் மூன்று நாட்களே மண அறையில் இருந்தனர். இச்சமயத்தில் அவர்களின் ஆன்மீக மாணவர் ரயீஸ் அஹ்மத் கனவொன்று கண்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓர் அறையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதன் வாயில் காவலராக அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் நின்று கொண் டிருக்கிறார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தரிசிக்க் வேண்டு மென்ற அடங்கா ஆவலுடன் அங்கு ஓடோடிச் சென்ற ரயீஸ் அஹ்மத், வாயில் காவலராக நின்று கொண்டிருந்த இப்னு மஸ்ஊத் (ரலி) அவர் களை அணுகி, தம்மை உள்ளே அனுமதிக்குமாறு வேண்டினார். ''சரி; இங்கேயே நில்லும். நான் அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் சென்று உம் வரவை எடுத்துரைத்து, அனுமதி பெற்று வருகிறேன். அதன்பின் நீர் உள்ளே செல்லலாம்'' என்று கூறுகிறார்கள் இப்னு மஸ்ஊத் (ரலி).

உள்ளே சென்றுவிட்டு விரைவில் திரும்பிய இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், ரயீஸ் அஹ்மதை நோக்கி, ''நீர் அண்ணல் நபி (ஸல்) அவர் களைக் காணக்கூடிய ஆன்மீகப் பரிபக்குவத்தை இன்னும் அடையப் பெறவில்லை. ஆதலின் திரும்பிச் செல்லும். உம் ஆன்மீக ஆசானிடம், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் 'ஸலாம்' உரைத்தாக எடுத்துரைத்து, கடந்த மூன்று நாட்களாக ஏன் அவர் தமக்கு வழக்கமாக அனுப்பி வைத்துக் கொண்டிருந்த காணிக்கையை அனுப்பாதிருந்துவிட்டார் என்று கேட்டதாகவும் கூறுமாறு பணித்தார்கள்'' எனச் சொன்னார்.

விழித்தெழுந்ததும், வைகறையிலேயே தம் ஆன்மீக ஆசானாகிய குத்புத்தீன் (ரஹ்) அவர்களை அணுகி, தாம் கண்ட கனவை ரயீஸ் அஹ்மது விண்டதும், அடுத்த கணமே அவர்கள் தம் தவற்றை உணர்ந்து, தம் மனைவியை மண விடுதலை செய்து விட்டனர்.

அது கண்டு ரயீஸ் அஹ்மதுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் திடுக்கத் திற்கும் அளவில்லை. அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''நான் நாள்தோறும் அண்ணல் நபி (ஸல்)

அவர்கள் மீது மூவாயிரம் ஸலவாத் ஓதும் வழக்கமுடையவனாக இருந்தேன். மணமுடித்த இந்த மூன்று நாட்களாக அதனை மறந்து வாளாவிருந்துவிட்டேன். அதனையே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நினைவூட்டியுள்ளனர். மணவாழ்க்கை என் ஆன்மீக உயர்வுக்குக் குந்தகம் விளைப்பதால், அதனை உதறித்தள்ளினேன்'' என்று கூறினர்.

இதன்பின் ஒளஷ் வாழ்க்கையே குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்குக் கசந்துவிட்டது. எனவே அவ் ஊரைவிட்டு நீங்கி, பக்தாது மாநகரம் வந்து சேர்ந்த அவர்கள், அங்கு வாழ்ந்து வந்த ஷைகு ஷிஹாபுத்தீன் சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களையும், ஷைகு அவ்ஹதுத்தீன் கிர்மானி (ரஹ்) அவர்களையும் கண்டு அளவளாவி, அவர்களிடமிருந்து பல ஆன்மீக இரகசியங்களை அறியலாயினர். பிற்காலத்தில் அவர்கள், சுஹ்ரவர்தீ (ரஹ்) அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, அவர்கள் மாபெரும் இறைநேசச் செல்வரென்றும், அவர்கள் போன்று வணக்கவாளரைத் தாம் தம் பயணங்களின் போது பார்த்ததேயில்லை என்றும் எடுத்துரைத்தனர். பக்தாதில் வைத்து, தம் ஆன்மீக ஆசான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், இந்தியாவுக்குப் புறப்பட்டுவிட்டார்கள் என்று கேள்வியுற்று, ஷைகு ஜலாலுத்தீன் தப்ரேஸி (ரஹ்) அவர்களுடன் இந்தியாவுக்குப் புறப்பட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், காடு, மலை, வனாந்தரங்களையெல்லாம், கடந்து மூல்த்தான் வந்தடைந்து, அங்குள்ள பள்ளிவாயில் ஒன்றில் தங்கினார்கள்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் மூல்த்தான் வந்த செய்தி அங்கு ஆன்மீகச் செங்கோல் செலுத்தி வந்த இறைநேசச் செல்வர் பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்களுக்கு உள்ளுணர்வு மூலம் தெரிய வந்ததும், அவர்கள் தம் ஆன்மீக மணவர் ஒருவரைப் பள்ளிவாயிலுக்கு அனுப்பி, அவர்களைப் பார்த்துவரச் செய்தனர். அவர் சென்று அங்கு பார்த்த புதுமைகளை ஒன்றின் பின் ஒன்றாக உரைத்ததும், அவர்களின் மாண்பினை நன்கு உணர்ந்து கொண்ட பஹாவுத்தீன் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள் பல்லக்கு இவர்ந்து பள்ளிவாயில் வந்து அவர்களை ஆரத்தழுவி வரவேற்று, தம் இல்லம் அழைத்துச் சென்று உபசரித்து மகிழ்ந்தனர்.

இக் காலை முகலாயர்கள் பெரும் படையுடன் மூல்த்தான் மீது படையெடுத்து வந்தபொழுது, யாது செய்வதென அறியாது திகைத்த அதன் மன்னர் நாஸிருத்தீன் குபாச்சா, குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் வருகையைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களிடம் ஓடோடி வந்து, தம்மையும் தம் அரசையும் காத்தருள் புரியுமாறு வேண்டி நின்றார். அவரது அவல நிலையைக் கண்டு பெரிதும் இரங்கிய அவர்கள், அவரிடம் ஓர் அம்பைக் கொடுத்து, ''இதனை மாலையில் அவர்களின்



பாசறை நோக்கி எய்வீராக'' என்று அருட்கட்டளை பிறப்பித்தனர். அவ்வாறே அவர் செய்ய, அந்த அம்பு அவர்களின் பாசறையில் போய் விழுந்த அடுத்த கணமே பாசறை முழுவதும் அமளி துமளி ஏற்பட்டு, அவர்கள் அனைவரும் திக்கு வேறு, திசை வேறாக வெருண்டோடி விட்டார்கள்.

மாபெரும் மகிழ்ச்சியுடன் அவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை அணுகி, ''அடிகளாரே! தாங்கள் என்னுடைய தலை நகரையே தங்களின் ஆன்மீக அரசின் தலைநகராகக் கொண்டு தங்கியருள வேண்டும்'' என்று வேண்டி நின்றார். அதுகேட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், ''இல்லை; இது என் சகோதரர் ஜகரிய்யா அவர்களின் ஆன்மீக அரசின் தலை நகராகும், என்றென்றும் அது அவ்வாறே இருக்கும்'' என்று கூறி அவரின் வேண்டுகோளுக்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

நொடியில் அவர்களின் புகழ் மணம் மூல்த்தானிலும், அதன் சூழலிலும் பரவி, மக்கள் சாரிசாரியாக அவர்களைக் காணவும், அவர்களிடம் 'பைஅத்' பெறவும் ஓடோடி வந்தனர். மூல்த்தானின் எல்லாச் சாலைகளும் அவர்கள் தங்கியிருக்கும் இடத்தை நோக்கிச் செல்வது போன்றே இருந்தது. அவர்களைக் காணவந்தோர் தங்களின் கரம் நீட்டி 'பை'அத்' வேண்டிய பொழுது, அவர்கள் தம் கையை இழுத்துக் கொண்டு, ''மன்னியுங்கள். இது என் சகோதரர் ஜகரிய்யா அவர்களின் ஆன்மீக ஆட்சிக்குட்பட்ட இடமாகும். அவர்களின் ஆன்மீக அரசில் நான் தலையிடுதல் சாலாது'' என்று கூறி மறுத்துவிட்டார்கள்.

இப்பொழுது மூல்த்தானானது கல்வி தேடிவரும் மாணவர்கள் ஒருங்கு கூடி கல்வி கற்கும் கல்விக் கூடமாக இருந்து வந்தது. அதன் காரணமாக அங்கு பேரறிஞர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். எனவே தான் அதனை அமீர் குர்து 'குப்பத்துல் இஸ்லாம்' என்று அழைத்தார். சுல்தான் நாஸிருத்தீன் குபாச்சாவின் பேராதரவால், அங்கு கல்வித் தரு வளர்ந்தோங்கி செழுங் கனிகளைச் சொரிந்து வந்தது. அக் கனிகளை உண்டு அறிவு, ஆன்மீகப் பசியைப் போக்கிக் கொள்ள வந்திருந்த மாணவர்களில், பதினெட்டு வயதை எய்திய ஓர் இளவலும் இருந்தார்.

திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து முடித்துவிட்டு, இஸ்லாமியச் சட்ட நூலான 'நாஃபி' என்பதனை அப்பொழுது அங்குள்ள மத்ரஸா ஒன்றில் பயின்று கொண்டிருந்த அவர், குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் மாண்பினைப் பற்றிக் கேள்வியுற்று, அவர்களைக் காண்பதற்காக வந்தார். அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள்.

தொழுது முடிந்ததும் தம் அருகே அமர்ந்திருந்த இளவலை குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் அருட்கண்களால் நோக்கி, ''மௌலானா! உம் கரத்தில் உள்ளது என்ன நூல்?'' என்று வினவினர். அதற்கு அவ் இளவல் 'நாஃப' என்று ஒரே சொல்லில் மறுமொழி பகர்ந்தார். அதுகேட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் புன்முறுவலுடன், ''அதனால் உமக்கு நஃப (நன்மை) ஏற்படட்டும்'' என்று வாழ்த்துரை பகர்ந்தார்கள்.

உடனே அவ் இளவல், ''தங்களின் அன்பும், அருளும், வாழ்த்துமே எனக்கு நற்பயன் நல்க வல்லது'' என்று கூறி, அவர்களின் செங்கமலப் பாதங்களைத் தொட்டு முத்தமிட்டார். அப்பொழுது அவரின் வாயிலிருந்து பின் வரும் கருத்தமைந்த கவிதை வெளிப் போந்தது.

''தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர், என்றென்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டவரே. தங்களின் வாழ்த்தை எதிர்பார்த்து வரும் எவரும் ஏமாற்றத்துடன் திரும்புவதில்லை. ஒரு பொருளின் மீது தங்களின் கடைக் கண் பார்வை ஒரு விநாடி விழுந்த போதினும், அது ஆயிரம் கதிரவனை விடப் பேரொளியுடன் துலங்கும்''

இவ்வாறு பாடிய அவர், குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கித் தமக்குப் 'பைஅத்' வழங்கித் தம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று பெரிதும் வேண்டி நின்றார். அதற்கு அவர்கள் கூறிய பதில் முன்னர் பலருக்குக் கூறிய பதிலாகவே இருந்தது.

கூரிய மதியினரான அவ் இளவல், தமக்கு அங்கு வைத்து அவர்கள் 'பைஅத்' தர விரும்பவில்லை என்பதையும், வேற்றூரில் வைத்துத் தர சூசகமாக விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்பதையும் விளங்கிக் கொண்டு, அவர்கள் அங்கிருந்து புறப்படும் நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

நாளுக்கு நாள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் புகழ் விண்மீன் உச்சத்தை நோக்கி ஏறிக்கொண்டிருந்தது. மக்கள் வெள்ளம் அவர்களிடம் 'பைஅத்' பெறுவதற்காக அவர்கள் தங்கியிருந்த இடத்தை நோக்கி, அலை மோதிய வண்ணம் இருந்தது. எனவே, தாம் அங்கு இனிமேல் தங்கி இருப்பது நல்லதல்ல என்று அவர்களும் எண்ணினார்கள்; ஜகரிய்யா (ரஹ்) அவர்களும் எண்ணினார்கள். தம்முடைய எண்ணத்தைச் சைக்கினையால் காட்டும் நோக்குடன், குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் பாத அணிகளை, அவர்கள் செல்ல வேண்டிய திக்கு நோக்கித் திருப்பி வைத்தனர் ஜகரிய்யா (ரஹ்) அவர்கள். அடுத்தகணம் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் பயணத்திற்கான ஆயத்தங்களைச் செய்யத் துவங்கிவிட்டார்கள். அவர்களுடன் அந்த இளவலும் கிளம்பி விட்டார்.



அடுத்து, குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், ஹான்ஸி வந்து, அங்கே தங்கினார்கள். அப்பொழுது அவ் இளவல், அவர்களை அணுகி, தம் வேண்டுகோளை மீண்டும் ஏக்கத்துடன் விடுத்தார். அதுகேட்டு குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் அழகுத் திருவதனத்தில் புன்முறுவல் ஒன்று பூத்தது. தம் கரம் நீட்டி அவரின் கரம் பிடித்து, அவருக்கு 'பைஅத்' வழங்கினார்கள் அவர்கள். அத்தகு பேற்றினைப் பெற்ற அவ் இளவல் யார்? அவரே பாபா பரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்கள் ஆவர்.

ஹான்ஸி வந்து சேர்ந்த குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக குருவின் அரசபீடமாகிய அஜ்மீருக்கு வர அனுமதி வேண்டி, அவர்களுக்கு மடல் தீட்டினர். அதற்கு அவர்களிடமிருந்து வந்த பதில், 'வேண்டாம்; உடலால் நாம் இருவரும் தொலைவில் இருப்பினும், அது நம்மிடையே நிலவும் ஆன்மீக உறவுக்குக் குந்தகம் விளைக்காது, எனினும் நீர், டில்லி சென்று அங்கு தங்குவீராக!'' என்பதாக இருந்தது.

குருவின் ஆணைப்படி டில்லிக்கு எழுந்தருளிய குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்கு, டில்லி மக்கள் அளித்த வரவேற்பானது, அரசரும் கண்டு வியப்புறும் வண்ணம் இருந்தது. அப்பொழுது டில்லி அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சிக் கொண்டிருந்த சுல்தான் ஷம்சுத்தீன் அல்தமிஷ் பாதுஷா, தம் அமைச்சர், பிரதானிகள் புடைசூழ நகர எல்லைக்கு வந்து, அவர்களின் பாதார விந்தங்களைத் தொட்டு முத்தமிட்டு, அவர்களை மரியாதையுடன் அழைத்துக் கொண்டு நகருக்குள் சென்றார். அங்கு அவர்களை ஓரிடத்தில் தங்க வைத்தார். அது அவர்களுக்குப் பிடிக்காததால், அவர்கள் யமுனை நதி தீரத்தில் உள்ள கேலோகரி எனும் இடத்தில் வந்து தங்கினார்கள். அங்கு சுல்தான் அல்தமிஷ் வாரத்திற்கு இருமுறை வந்து அவர்களின் தாளடியில் முழங்காலிட்டு அமர்ந்து, அவர்களின் அறிவுரைகளையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்றார்.

அவர் தம் அரசாங்க அலுவல்களையெல்லாம் விட்டு விட்டு, வாரம் இருமுறைத் தம்மைக் காண வருவது குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்கு என்னவோ மாதிரியாக இருந்தது. எனவே அவர்கள் ஒரு நாள், அவரை நோக்கி, ''தாங்கள் என்னை இங்கு வாரமிருமுறை காண வருவதால், அரசாங்க அலுவல்கள் பெரிதும் தடைப்படுமே'' என்று கூறினர். அதற்கு அவர், ''ஆம்; எனினும் பாதகமில்லை. எனினும் தாங்கள் டில்லிக்குள் வந்து தங்கினால் பெரிதும் நலமாக இருக்கும்'' என்று தாம் இதுகாறும மறைத்து வைத்திருந்த தம்முடைய உள்ளக்கிடக்கையை எடுத்தோதினார். அதுகேட்டு குத்புத்தீன் (ரஹ்) அவர்களும் 'நல்லது' என்று கூறினார்கள்.

இதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் இருப்பிடம் டில்லியின் நடுவிலேயுள்ள அய்னுத்தீன் பள்ளி வாயிலாக இருந்தது. அங்கு தங்கி

தவநிலையில் வாழ்ந்து வந்த அவர்களுக்குத் தம்முடைய குருவின் தரிசன பாக்கியம் இன்னும் கிட்டாதது பெரும் குறையாகவே இருந்தது. எனவே அவர்கள் மீண்டும் ஒருமுறை தம் ஆசானுக்குத் தாம் அஜ்மீர் வர அனுமதி வேண்டி மடல் தீட்டினர். மடல் கிடைத்த சின்னாட்களில் ஆசானே, மாணவரைக் கண்டு வர டில்லி கிளம்பிவிட்டார்கள்!

காஜா-யெ-காஜா கான் முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் டில்லிக்கு வருகை தந்தது, டில்லி மக்களை இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைக்குமாறு செய்தது. இன்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த அவர்கள், அதில் நீந்திய வண்ணம் அய்னுத்தீன் பள்ளிவாயிலை நண்ணி, அங்கு ஆசானையும் மாணவரையும் ஒரு சேரக் கண்டு களி கூர்ந்தார்கள். அரசஞானி சுல்தான் அல்தமிஷும் தம் அமைச்சர் பெருமக்களுடன் அங்கு வந்து, காஜா-யெ-காஜா கான் அவர்களை அன்புடன் வரவேற்று அவர்களின் கால்களைத் தொட்டு தம் கண்களிலே ஒற்றிக் கொண்டார்.

இதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக மாணவர்களை, ஒருவர் பின் ஒருவராகத் தம் ஆசானுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர்களை அன்புடன் ஆசீர்வதித்தனர் காஜா. அறிமுகச் சடங்கு ஒருவாறு முடிந்ததும், காஜா அவர்கள் தம் மாணவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''இன்னும் அறிமுகப்படுத்தப்படாமல் எவரேனும் உள்ளனரோ'' என்று வினவினர். ''ஆம்; ஃபரீதுத்தீன் மஸ்வூத் என்ற இளவல் உள்ளார். அவர் சில்லாவில் இருப்பதால் இங்கு வரவில்லை'' என்றனர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள்.

''அப்படியா! அப்படியெனின் நாமே அவரைச் சென்று கண்டு வருவோமே'' என்று கூறிக் கிளம்பிவிட்டார்கள் காஜா.

அவர்கள் இருவரும் சென்று, ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்கள் சில்லா இருந்த அறையின் கதவை மெதுவாக நீக்கினர். தம் ஆசானுடையவும், தம் ஆசானுடைய ஆசானுடையவும் எதிர்பாராத வரவு கண்டு பதறி எழுந்த ஃபரீதுத்தீன் (ரஹ்) அவர்கள், சில்லா இருந்ததனால் ஏற்பட்ட பலவீனத்தின் காரணமாக எழுந்திருக்க இயலாது, நீர் மல்கும் கண்களுடன் குப்புற வீழ்ந்தார்கள். அது கண்ட காஜா அவர்கள் தம் மாண வரை நோக்கி, பரீதிடமிருந்து அதிகமான வணக்கங்களை எதிர்பார்த்து அவரை அதிகமாகச் சோதிக்க வேண்டாமென்று கூறினர்.

அதன்பின் காஜா அவர்கள், ஃபரீதுத்தீன் (ரஹ்) அவர்களின் வலது கையையும்; குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அவர்களின் இடது கையையும் பிடித்து மெதுவாகத் தூக்கி, அவர்களை அமரச் செய்தனர். அதன்பின் காஜா அவர்கள் தம் இருகரங்களையும் விண்ணை நோக்கிய வண்ணம்,



உயர்த்தி ''யா இலாஹுல் ஆலமீன்! எங்களுடைய ஃபரீதை ஏற்றுக் கொள்வாயாக! அவரை நிறைவுபெற்ற தர்வேஷாக ஆக்கியருள்வாயாக!'' என்று இறைஞ்சினர். அப்பொழுது, ''நாம் ஃபரீதை ஏற்றுக் கொண்டோம், அவர் தனிப்பெரும் சிறப்பை எய்தப் பெறுவார்'' என்று அசரீரி முழங்கியதை மூவரும் செவியுற்று மகிழ்ந்தார்கள்.

இதன்பின் காஜா அவர்கள், குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்களுக்கு வழிவழியாக சிஷ்திய்யா தரீக்காவில் வந்து கொண்டிருக்கும் ஆன்மீக நன்கொடைகளையும், ஆசீர்வாதத்தையும் வழங்குமாறு கூற, தம் ஆசானின் முன்னிலையில் வைத்து அவ்வாறு செய்வது தமக்குத் தகாது என்று கூறி மறுத்து விட்டார்கள் அவர்கள்.

அதுகேட்ட காஜா அவர்கள் தம் கிர்க்காவை ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்கள் மீது போர்த்த, குத்புத்தீன் (ரஹ்) அவர்களும் தம்முடைய தலைப்பாகையை அவர்களின் தலைமீது சூட்டி மகிழ்ந்தனர். ஆசானும், ஆசானுடைய ஆசானும் ஒருங்கு சேர்ந்து, ஒரே சமயத்தில் ஒருவரை ஆசீர்வதித்த இதுபோன்ற நிகழ்ச்சி, சிஷ்தி ஸில்ஸிலாவின் வரலாற்றிலேயே கிடையாது. எனவே தான் பிற்காலத்தில் அமீர் குர்து, பாபா ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்களைப் பாராட்டும் பொழுது,

''இரண்டு மகான்களும் தங்களுக்கு இரண்டு உலகங்களை ஈந்தருளினார்கள்.

இந்தக் காலத்தின் அரசர்களான இவர்களிடமிருந்து தாங்கள் அரசபாரத்தை ஏற்றுக்கொண்டீர்கள்;

இந்த உலகத்துடையவும் அந்த உலகத்துடையவும் அரசாட்சி, நிச்சயமாகத் தங்களுக்கே உரியதாகும்.

படைப்புகள் அனைத்தும் தங்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளன'' என்று பண்ணிசைத்து மகிழ்கிறார்.

இதன்பின் காஜா அவர்கள், குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''பாபா பக்தியார்! நீர் பெற்ற பேறே பேறு! ஸித்ரத்துல் முன்தஹாவில் கூடு கட்டி வாழும் இராஜாளியை நீர் பிடித்துவிட்டீர். ஃபரீத், தர்வேஷ்களின் ஸில்ஸிலாவுக்கு ஒளி நல்கும் நந்தா விளக்காக விளங்குவார்'' என்று மகிழ்ச்சியில் தோய்ந்த நன்மாராயம் மொழிந்தனர்.

அரசராயினும், துறவிகளின் உளப் பண்பாட்டுடன் வாழ்ந்து வந்த சுல்தான் அல்தமிஷுக்கு, குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் டில்லி வருகை, இறைவன் அவருக்கு அளித்த அருட்பேறாகவே இருந்தது. அரசு

அலுவல்கள் முடிவுற்றதும், அவர்களைக் கண்டு, அவர்களிடமிருந்து அறிவுரையும் வாழ்த்தும் பெறுவதற்காக, அவர்கள் தங்கியிருந்த கான்காஹவுக்கு ஓடோடி வந்து கொண்டிருந்தார் அவர். அவர் வருந்தோறெல்லாம், ஏழைகள் மீதும், இறைபக்தர்கள் மீதும் அன்புடன் நடந்து கொள்ளுமாறு அவர்கள் அவருக்கு அறிவுரை பகர்ந்து வந்தார்கள். அதன் காரணமாக, சுல்தான் அல்தமிஷ் ஓர் இலக்கிய முஸ்லிம் மன்னராக உருவாகிக் கொண்டிருந்தார்.

இரவில் நெடுநேரம் அவர் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார். இரவில் அவர் உறங்குவதை எவரும் கண்டதில்லை என்று கூறும் வண்ணம், அவருடைய இராப் பொழுது கழிந்து வந்தது. ஒருவேளை அவரில் வணக்கத்திற்கும், 'உறக்கத்திற்கும் இடையில் ஏற்படும் போராட்டத்தில், உறக்கம் மிகைத்து அவரைக் கீழே வீழ்த்திவிடின். உடனே திடுக்குற்று விழித்தெழுந்து 'உளூ' செய்து, மீண்டும் வணக்கத்தில் ஈடுபடுவார். அப்பொழுது பணியாளர்களுக்குச் சிரமம் கொடுக்கக் கூடாது என்று, சந்தடி செய்யாது காலின் முன் விரல்களால் நடந்து சென்று தண்ணீர் எடுத்து 'உளூ'ச் செய்து கொள்வார்.

சில பொழுது பக்கீர் போன்று உடையணிந்து, ஒரு துணையாளுடன் பணப்பை சகிதம் சென்று துன்பத்தில் உழலும் ஏழை எளியவர்களின் அவலக் கதைகளைக் கேட்டு, அவர்களுக்கு உதவி நல்குவார். அப் பொழுது அவர், அவர்களை நோக்கி, ''இது பற்றி எவரிடமும் எடுத் துரைக்க வேண்டாம்'' என்று வேண்டிக்கொள்வார். மீண்டும் அவர், அவர் களை நோக்கி ''நீங்கள் உணவின்றித் தவிக்கும்பொழுது, எவ்விதத் தடையு மின்றி என் அரசவை வாருங்கள். நான் ஆவன செய்கிறேன்'' என்று கூறிவருவார்.

அவருடைய அரண்மனைத் தலைவாயிலில் ஒரு மணி தொங்க விடப்பட்டிருந்தது. துன்புறுவோர், தொல்லைகளுக்கு ஆளானோர், நீதி வேண்டுவோர், அம் மணி கட்டடப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்து இழுக்க வேண்டியதுதான். கிண், கிண் என மணி ஓசை முழங்கும். அடுத்த கணம் அரசு ஊழியன் ஒருவன் வந்து, அவரை சுல்தானின் திருமுன் அழைத்துச் செல்வார். அவனின் அவலம் கேட்டு, அதற்கேற்ப நீதியோ, உதவியோ வழங்குவார் அவர்.

அப்பொழுது அவரின் திருவாயிலிருந்து ''என்னுடைய ஆட்சியில் நீங்கள் துன்புறின், அது பற்றி அல்லாஹ் மறுமை நாளில் என்னிடம் வினவும்பொழுது, நான் மறுமொழி கூற இயலாது தத்தளிக்கும் வண்ணம் என்னை ஆக்கிவிடாதீர்கள். அல்லாஹ்வின் திருச் சமூகத்தில் என் நிலை மோசமாகிவிடா வண்ணம் காக்கும் பொறுப்பு, குடி மக்களாகிய உங்களுடைய கையில்தான் இருக்கிறது'' என்ற மணி வாசகங்கள் உதிரும். அவற்றைச் செவியேந்தி கண்ணீர் சிந்துவர் மக்கள்.



உண்மையில் மரண பயமும், மறுமைபற்றிய பயமும் சுல்தான் அல்தமிஷின் உள்ளத்தைக் கௌவிப்பிடித்து, ஆகம் முழுவதையும் தழுவி நின்றன. இதுபற்றிய நிகழ்ச்சி ஒன்றை நாம் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் வாயிலாகவே கேட்போம்.

''ஓரிரவு நான், என்னுடைய தவமடத்தில் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டிருந்தேன். அப்பொழுது சுல்தான் அல்தமிஷ் அங்கே திடீரனெ வந்தார். அதன் காரணமாக என் தியானம் கலைந்தது. அவர் கீழே வீழ்ந்து என் பாதங்களைப் பற்றிக் கொண்டு, அவற்றைத் தம் கண்ணீரால் கழுவினார். அப்பொழுது நான் அவரை நோக்கி, ''அழுகையும் விம்மலும் ஏனோ? யாது வேண்டும் உரைப்பீர்'' என்று கூறினேன். அதற்கு அவர் ''பேரருளாளனாகிய அல்லாஹ் எனக்கு மாபெரும் அரசாங்கத்தை வழங்கியுள்ளான். மறுமையில் இறைவன் அதுபற்றி என்னை விசாரிப்பின், நான் தகுந்த பதில் கூறியே ஆக வேண்டும். அப்பொழுது தாங்கள் எனக்கு ஆதரவு நல்கி, என்னை அரவணைக்க வேண்டும்'' என்று கல்லும் கரைந்துருகும் வண்ணம் வேண்டினார். நான் ஒப்புதல் நல்கும் வரை அவர் என் கால்களை விடவில்லை.''

'மக்கள் காவல் பணிக்கென ஆண்டவன் மன்புவிக்கண் விடுத்தனன்'' என்பதைத் தம்முடைய தாரக மந்திரமாகக் கொண்டிருந்த சுல்தான் அல்தமிஷ், வேனிற் காலத்தில் குளம், குட்டைகள் வரண்டு அதன் காரணமாக மக்கள் படும் துயர் கண்டு பெரிதும் வெதும்பினார். அத்துயர் போக்க தமக்கோர் வழிகாட்டியருளுமாறு ஓரிரவு அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் முறையிட்டு அவர் துயிலுறுங்கால், கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் புரவி மீது இவர்ந்து வந்து ஓரிடத்தில் நிற்கவும், அங்கு அப்புரவி தன் கால்களால் உதைக்க, நீர்ச்சுனை குமிழியிட்டுக் கொண்டு வரவும், அப்பொழுது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவரை நோக்கி, ''ஷம்ஷே! இது மாண்பார்ந்த இடம். இங்கு குளம் தோண்டும். இங்கு எங்கும் கிடைக்கா இனிய நன்னீர் கிடைக்கும்'' என்று நவின்று விட்டு மறைந்தனர். திடுக்குற்று விழித்தெழுந்த அவர், வைகறைத் தொழுகை தொழுது விட்டுத் தம் அமைச்சர் பெருமக்களுடன், அந்த இடத்திற்குச் சென்று பார்க்கும் பொழுது அங்குக் குதிரையின் கால் தடத்தையும், நீர்ச்சுனை குமிழியிட்டு வந்து கொண்டிருப்பதையும் கண்டு, அந்நீர்ச் சுனையில் சிறிதளவு நீர் எடுத்து அருந்தினார். அப்பொழுது அவர் தம்மை அறியாமல் 'ஆஹா! என்ன மதுரமான நீர். இத் தகு நீரை நான் என் வாணாளில் அருந்தியதில்லையே' என்று கூறி இறும்பூதெய்தினார்.

அடுத்தகணமே, அவ் இடத்தில் ஒரு குளம் வெட்ட ஆணைபிறப்பித்தார். அதுவே 'ஹவ்லுஷம்ஸி'யாகும். இந்த ஹவ்லின் அருகே பல வலிமார்களும், அப்தால்களும், அக்தாபுகளும் வந்து அமர்ந்துவிட்டுச் செல்வதாகக் கூறப்படுகிறது.

ஹவ்லு ஷம்ஸியின் நீர் மதுரமாக இருப்பதற்குக் காரணம், அங்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருப்பாதம் பட்டதும், அங்கு பல வலிமார்கள் அடங்கப் பெற்றிருப்பதுமாகும் என்று குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் கூறினர். அதன்பின் 'இன்னும் எத்தனை வலிமார்கள் இங்கு அடங்கப் பெற்றார்களோ' என்று கூறிய அவர்கள், 'இதன் அருகேயே என்னுடைய அடக்கவிடமும் அமையும்' என்று நீர் மல்கும் கண்களுடன் கூறினர். மேலும் அவர்கள், ''இந்த ஹவ்லின் அருகிலும், இதன் அண்மையில் உள்ள அவ்லியா மஸ்ஜிதிலும், ஒருவன் இரவில் தங்கி, விழித்திருந்து தியானம் செய்து இறைவனிடம் 'துஆ' இரப்பின், அது ஏற்றுக் கொள்ளப்படும்'' என்றும் இயம்பினார்கள்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் 'ஹவ்லு ஷம்ஸி'யின் அருகேயே, அதன் மாண்பினைக் கருதி, அதிகமதிகமாக வணக்கத்தில் ஈடுபடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். ஒருநாள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களும், ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்களும், ஷைகு மஹ்மூது பத்ரூத்தீன் கஸ்னி (ரஹ்) அவர்களும், ஷைகு தாஜுத்தீன் முனவ்வர் (ரஹ்) அவர்களும் அமர்ந்து தியானத்தில் இருந்தபொழுது, நீல நிற அங்கியணிந்த ஒருவர் ஒட்டகை மீது இவர்ந்து வந்து, அந்தக் குளத்தில் குளித்து விட்டு அதன் அருகே இரண்டு 'ரகஅத்' தொழுதார். அதன்பின் அங்கு வீற்றிருந்தவர்களை நோக்கி, ''நீங்கள் யார்?'' என்று வினவினார். ''அல்லாஹ்வின் தியானத்தில் ஈடுபட்டுள்ள பக்கீர்கள்'' என்று அங்கிருந்த ஷைகு தாஜுத்தீன் (ரஹ்) அவர்கள் பதிலிறுத்தார்கள். அது கேட்ட அவர், ''குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்கும், காஜி ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்களுக்கும், அபூ ஸயீத் திமிஷ்கியின் ஸலாத்தைத் தெரியப்படுத்துவீராக!'' என்று கூறிவிட்டு அவ் இடத்தை விட்டு அகன்றார்.

அடுத்த கணம் அவரைப் பார்த்து, அவருடன் உரையாடுவதற்காக குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் சரேலெனப் பாய்ந்து அவர் பின்னே ஓடிய பொழுது, அவர் திடீரென மறைந்துவிட்டார். அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, ''அபூஸயீது திமிஷ்கி, 'ரிஜாலுல் கைப்' (மறைவான மனித) இவத்தைச் சேர்ந்தவர்'' என்று கூறினர்.

இப்பொழுது ஆன்மீகத்தின் உறுதியான நிலையை எய்தப் பெற்ற குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அண்ணல் நபி (ஸல்) அவர்களின், வழி



முறையைப் பின்பற்ற எண்ணி, ஒரு பெண்ணை மணமுடித்து இல்லற வாழ்வைத் துவங்கினர். அவர்களுக்கு இரு ஆண் மக்கள் பிறந்ததும், அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் திருப்பெயர்களாகிய அஹ்மது என்பதையும், முஹம்மது என்பதையும் சூட்டி மகிழ்ந்தனர்.

தனித்திருந்த அவர்களின் உலக வாழ்வு, இப்பொழுது மனைவி, மக்கள் ஆகியவர்களுடன் சேர்ந்து நான்கு உறுப்பினர்கள் அடங்கியதாக விளங்கியது. போதிய வருவாயின்மையின் காரணமாக, அவர்கள் சில பொழுது பட்டினியால் வருந்தவும் நேரிட்டது. அவர்களின் நிலையை உள்ளுணர்வால் விளங்கிய அவர்களின் ஆசான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், பட்டினியாயிருக்கும் நாட்கள் மூன்று நாட்களுக்குமேல் தொடரின், பிறரிடமிருந்து ஐந்நூறு திர்ஹங்களுக்கு மேற்படாமல் கடன் வாங்கிக் கொள்ள அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தனர். எனினும் அந்த அனுமதியையும், அவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வில்லை.

ஒரு தடவை சுல்தான் அல்தமிஷ், அவர்களுக்குப் பொன்னையும், வெள்ளியையும் காணிக்கையாக அனுப்பிய பொழுது, அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளாது, ''நான் அவரை என்னுடைய நண்பராகக் கருதுகிறேன். ஆனால் அவரோ என்னைத் தம்முடைய பகைவனாகக் கருதுகிறார். அல்லாஹ்வின் நினைவிலிருந்து என்னுடைய கவனத்தைத் திருப்பும் பொருள்களையல்லவோ அவர் எனக்கு அனுப்பியுள்ளார்'' என்று வருத்தத்துடன் கூறித் திருப்பி அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு நாள் அமைச்சர் இக்தியாருத்தீன், அவர்களை அணுகி, அவர்களின் முன் சில பொற் காசுப்பைகளைக் காணிக்கையாக வைத்து, ''அடிகளாரே! இவற்றைத் தாங்கள் அருள்கூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்னும் சில கிராமங்களையும் தங்களுக்கு மானியம் வழங்க விரும்புகிறேன். அவற்றையும் தாங்கள் அன்புகூர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டி நின்றார்.

அதுகேட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், ''என்னுடைய ஷைகுமார்களோ, அல்லது என் ஷைகுமார்களின் ஷைகுமார்களோ எவரிடமிருந்தும், எத்தகு காணிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்விதம் இருக்கும் பொழுது, நான் எவ்வாறு நீர் அளிக்கும் காணிக்கையை ஏற்றுக் கொள்வேன்? ஏற்றுக் கொளின் மறுமையில் நான் எவ்வாறு அவர்களின் கண்களில் விழிப்பேன்?'' என்று கூறி அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள்.

ஆனால் அவரோ, அவர்களை விடுவதாயில்லை. அவற்றை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று அவர்களைப் பெரிதும் வற்புறுத்தினார்.

அப்பொழுது அவர்கள் தாம் அமர்ந்திருந்த தொழுகை விரிப்பின் ஒரு நுனியைத் தூக்க அதன் கீழே பொன்னாறு ஒன்று ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டதும், அவருக்கு ஏற்பட்ட வியப்பிற்கு அளவில்லை.

அப்பொழுது அவர்கள், அவரை நோக்கி, ''அல்லாஹ் தன் அடியார்களுக்கு இத்தகு நற்பேற்றினை அளித்திருக்கும் பொழுது, நீர் உம்முடைய காணிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களை வற்புறுத்தல் சாலுமா! இனிமேல் இவ்வாறு இறைவனின் நல்லடியார்கள் மாட்டு நடந்து கொள்ளாதிருப்பீராக!'' என்று அறிவுரை பகர்ந்து அனுப்பி வைத்தார்கள்.

வீட்டில் குழந்தைகள் பட்டினியால் கிடந்து பரிதவிப்பதைக் காணச் சகியாத அவர்களின் துணைவியார், தங்களுக்குக் காஜா சாஹிப் அளித்த அனுமதியைப் பயன்படுத்தி, அண்டையில் வாழ்ந்து வந்த ஷர்ஃபுத்தீன் பக்குவால் என்பவரின் மனைவியிடம் சிலபொழுது கைமாற்றாகப் பணம் வாங்கிக் குடும்பத்தை நடத்தி வந்தார். ஒருநாள் ஷர்ஃபுத்தீன் பக்வாலின் மனைவி, அவரைப் பார்த்து, ''நாங்கள் உதவி செய்திராவிட்டால், நீங்கள் இதுவரை பட்டினி கிடந்து செத்திருப்பீர்கள்'' என்று கூறியது குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் செவிப்பட்டதும், அவரிடம் இனிமேல் கை மாற்று வாங்க வேண்டாமென்று தம் மனைவியிடம் பணித்தனர் அவர்கள்.

அதன்பின் அவர்கள் தம் மனைவியை நோக்கி, ''இனிமேல் உனக்கு உணவு வாங்கப் பணம் தேவைப்படின், இறைவனின் திருப்பெயரைக் கூறிய வண்ணம் மாடத்தில் கையை இடு. கிடைப்பதை எடுத்துக் கொள்'' என்று கூறினர். அவ்வாறே அவர் செய்ய, சூடான ரொட்டி (காக்கு)கள் அவர்களின் கையில் வந்தன. அவற்றை எடுத்து, தாமும் உண்டு, தம் கணவருக்கும், குழந்தைகளுக்கும் கொடுத்து வந்தார் அம்மாதரசி. இவ்வாறு பல மாதங்கள் ஓடின.*

ஒருநாள் ஷர்ஃபுத்தீன் பக்வாலின் மனைவி, குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் துணைவியாரைச் சந்தித்த பொழுது, ''என்ன! கைமாற்று வாங்க அடிக்கடி வந்து கொண்டிருப்பீர்களே. இப்பொழுது வரக்

* இதன் காரணமாகவே அவர்களுக்கு 'காக்கி' என்ற பட்டம் ஏற்பட்டதென்று ஒரு வரலாறு கூறுகிறது. ஆனால் மற்றொரு வரலாறோ, அவர்கள் ஒரு தடவை ஹவ்லு ஷம்ஸியின் அருகில் வீற்றிருந்த பொழுது, கூடியிருந்தோர் உண்ண ரொட்டி வேண்ட, அவர்கள் ஹவ்லு ஷம்ஸியில் தம் கையை விட்டு சுடச் சுட ரொட்டி எடுத்துக் கொடுத்தனர் என்றும், அதன் காரணமாக அவர்களுக்கு அப்பெயர் ஏற்பட்டதென்றும் எடுத்துரைக்கிறது. இதன் நினைவாக, இன்றும் அவர்களின் அடக்க இடத்தில் நேர்ச்சையாக 'காக்' என்ற இனிப்புக் கலந்த ரொட்டி பங்கிடப்படுகிறது.



காணோமே'' என்று கேட்டாள். அதுகேட்ட அம் மங்கை நல்லார், நடந்து வரும் அற்புத நிகழ்ச்சியை எடுத்துரைத்தார். அக் கணத்திலிருந்து மாடத்தில் கையை வைத்ததும், சூடான ரொட்டிகள் வருவது நின்று விட்டன. இதனை அவர் தம் கணவரிடம் எடுத்துரைத்த பொழுது, ''நீ அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியதன் காரணமாக அவை வருவது நின்றுவிட்டன'' என்று கூறினார்கள்.

இதன்பின் என்ன? இல்லத்தில் நீங்காத வறுமைதான். ஒரு தடவை அவர்களின் குடும்பத்தினர் தொடர்ந்து மூன்று நாட்கள் பட்டினி கிடந்தனர். இதனை அவர்களின் சின்னஞ்சிறு மகன் காஜா முஹம்மது தன் விளையாட்டுத் தோழன் ஒருவனிடம் கூறிவிட்டான். இதனை அவன் போய்த் தன் தந்தையிடம் கூற, அவர் அலறித் துடித்து அறுசுவை உண்டி தயாரித்து வந்து, 'உண்ணுக, உண்ணுக' என்று அவர்களை வேண்டி நின்றதோடு, இதனைத் தம்மிடம் முன்னமேயே தெரிவித்திருக்கக் கூடாதா என்றும் வருத்தப்பட்டுக் கொண்டார்.

அதுகேட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் இல்லத்தின் இரகசியம் வெளியாகிவிட்டது அறிந்து, சினமீக் குற்றவர்களாய், ''இதனை எவன் தங்களுக்கு அறிவித்தானோ, அவன் கழுத்தொடிந்து சாகட்டும்'' என்று முனிந்தனர். அடுத்த கணம் தன் வயதொத்த சிறுவர்களுடன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த அவர்களின் மகன் காஜா முஹம்மது திடீரென தலைகுப்புற வீழ்ந்து, கழுத்தொடிந்து இறந்தான்.

அவனை நல்லடக்கம் செய்துவிட்டு, குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் இல்லம் திரும்பிய பொழுது அவர்களின் மனைவி அழுது கொண்டிருந்தார். அதைக்கண்ட அவர்கள் பெரிதும் கழிவிரக்கத்துடன், ''அச்சமயம் நான் அவனுடைய நீண்ட ஆயுளுக்காக இறைஞ்சி இருப்பின் அவன் பிழைத்திருப்பான். இப்பொழுது என் செய்வது? நடக்க வேண்டியது நடந்துவிட்டது'' என்று ஆறுதல் கூறினார்கள்.

ஒரு தடவை நிஜாமுத்தீன் ஔலியா, தம்முடைய ஞான குருவான பாபா பரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்களை நோக்கி, அவர்களின் ஆன்மீக ஆசான் காஜா குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் ஏதேனும் உண்கலன்கள் வைத்திருந்தார்களா என்று வினவிய பொழுது, ''அவர்கள் பெரிதும் ஏழ்மை நிலையில் வாழ்ந்தார்கள். அவை கூட அவர்களிடம் இல்லை'' என்று பதிலிறுத்தார்கள் பாபா ஃபரீதுத்தீன்.

மேலும் பாபா அவர்கள் கூறுகிறார்கள் : ''என் ஆன்மீக ஆசான் இருபதாண்டுகளாக ஆலமுல் தவக்குவிலேயே வாழ்ந்து வந்தார்கள். தவமடத்தில் உணவு சமைப்பதற்குப் பணம் தேவைப்படின், அவர்கள்

தம் தொழுகை விரிப்பின் ஒரு நுனியைப் பணத்திற்காக வந்து நிற்கும் சமையற்காரனிடம் சாடை செய்து காட்டுவர். அவன் அதனை நீக்கிப் பார்ப்பின், அவனுக்கு அன்று எவ்வளவு பணம் தேவையோ அது அங்கே இருக்கும்.''

அவர்கள் எவரிடமிருந்தும் அன்பளிப்புகளையோ, காணிக்கை களையோ ஏற்றுக்கொள்வதில்லை. எனினும் அவர்களின் தவமடத்திற்கு வரும் எந்த சூபியும், வெறும் வயிற்றுடன் திரும்பியதில்லை. ஒரு வேளை உணவு முடிந்தபின், அங்கு வரும் சூஃபிகளுக்கு வயிறு நிரம்பத் தண்ணீராவது கொடுத்து அனுப்ப வேண்டுமென்றும், அவர்களை வெறும் வயிற்றுடன் அனுப்பக் கூடாதென்றும் தம் மாணவர் பத்ருத்தீன் கஸ்னவீக்கு ஆணை பிறப்பித்திருந்தார்கள்.''

டில்லியிலிருந்த குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் தவமடத்திற்கு மக்கள் சாரி சாரியாக ஆசி வேண்டியும், ஆதரவு வேண்டியும் வந்து போய்க் கொண்டிருப்பதைக் கண்டு பெரிதும் அசூசையுற்றார் ஷைகுல் இஸ்லாம், நஜ்முத்தீன் சக்ரா. குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் டில்லிக்கு வந்த புதிதில் அங்கு ஷைகுல் இஸ்லாமாக இருந்த ஜமாலுத்தீன் முஹம்மது பிஸ்தாமி, குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் மாண்பினை உணர்ந்து அவர்களைக் காண வந்து அவர்களின் கரம்பிடித்து 'பைஅத்' பெற்றார். அவர் இறந்ததும், அப் பதவியில் குத்புத்தீன் (ரஹ்) அவர்களையே நியமிக்க எண்ணித் தம்முடைய எண்ணத்தை அவர்களிடம் தெரியப்படுத்தவும் செய்தார் சுல்தான் அல்தமிஷ். ஆனால் அவர்கள், அதனை ஏற்றுக் கொள்ள வில்லை. அதன்பின் தான் அவர் அப்பதவியை நஜ்முத்தீன் சக்ரா என்பவரிடம் ஒப்படைத்தாரேயன்றி வேறில்லை.

நஜ்முத்தீன் சக்ரா தம் மீது அழுக்காறுற்றிருப்பதை குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் உணர்ந்தார்கள். மனித இயல்பு இவ்வாறு இருக்கிறதே என்று பெரிதும் வருந்தினார்கள். இதைப்பற்றி அவர்கள் கூறும்பொழுது, ''ஷைகு நஜ்முத்தீன் என் ஆசானின் ஆசான், காஜா உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் ஆன்மீக மாணவர். தூய உள்ளம் படைத்த பெரியார். எனினும் நான் டில்லியில் வாழ்வது அவருடைய மரியாதைக்கும், மதிப்புக்கும் குந்தகம் விளைவிக்கிறது என்று எண்ணி அவர் சிறிது பொறாமையுறுவது போல் தெரிகிறது' என்று குறிப்பிட்டனர்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் மீது மக்களின் பக்தியும், சுல்தன் அல்தமிஷின் அன்பும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. சுல்தான் அல்தமிஷ், குத்புத்தீன் (ரஹ்) அவர்கள்மீது அளவற்ற அன்பு கொண்டு, அவர்கள் காலாலிட்ட பணியைத் தலையால் செய்து வரும் செய்தி, நாடு, நகரம், பட்டி, தொட்டி ஆகியவற்றிலெல்லாம் பரவி வந்தது.



ஒரு நாள் உழவர் ஒருவர் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களை அணுகி, அரசாங்க அதிகாரிகள் தம் நிலத்தைத் தம்மிடமிருந்து அநியாய மாக அபகரித்துக் கொண்டார்களென்றும், அதனை அவர்கள் தலையிட்டு மீட்டித் தரவேண்டுமென்றும், டில்லியிலுள்ள அவரின் மாணவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களுக்குத் தமக்காகப் பரிந்து மடல் தீட்டின், அவர்கள் ஒரு நொடியில் அதற்கான ஆணையை சுல்தானிடமிருந்து பெற்று விடுவார்கள் என்றும், அழாக் குறையாகக் கூறினார். அதுவே அவருக்குரிய ஒரே நிலம் என்பதையும், அஃதின்றேல் அவரின் குடும்பம் பட்டினி கிடந்து வருந்த வேண்டும் என்பதையும், அவரின் வாயிலாக காஜா அவர்கள் அறிய வந்ததும், அவர்களின் உள்ளத்தில் இரக்க நீர் சுரந்தது. சற்று நேரம் தலையைக் குனிந்த வண்ணம் இருந்த அவர்கள், ''ஆம்; நீர் கூறுவது போல் பரிந்துரை செய்து எழுதின், உம் அலுவல் முடிந்துவிடும் தான். ஆனால் இறைவன் நாட்டமோ வேறுவிதமாக உள்ளது. நானே சென்று அதனை உமக்கு மீட்டித்தர அல்லாஹ் நாடி யுள்ளான். எனவே நாம் இருவரும் டில்லி செல்வோம். புறப்படும்'' என்று கூறினர். அதுகேட்டு அந்த உழவருக்கு ஏற்பட்ட உவகைக்கு ஒப்பில்லை.

தம் தந்தையார் டில்லி புறப்படத் தயாராகி விட்டதை அறிந்த அவர்களின் அருமை மைந்தர் பக்ருத்தீன், அவர்களை அணுகி ''அப்பா! சுல்தானிடம் எனக்காகப் பரிந்துரை செய்து, மண்டல் கிராமத்தை எனக்கு மானியமாகப் பெற்றுத் தாருங்கள்'' என்று கூறினார்.

காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் திடீரென டில்லி புறப்பட்டதால், அவர்கள் தம் வருகையைப் பற்றி டில்லியிலிருந்த தம் மாணவருக்குத் தெரிவிக்கவில்லை. எனவே அவர்கள் டில்லியின் அருகே வந்து கொண்டிருந்த பொழுது, அவர்களைக் கண்ட ஒருவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களிடம் ஓடோடி வந்து, அவர்களின் வரவை எடுத்துரைத்த பொழுது, அவர்களால் தம் காதுகளையே நம்ப இயலவில்லை. நடப்பது கனவா அல்லது நனவா என்று சற்று நேரம் திகைத்த அவர்கள், அதன்பின் தெளிவு பெற்றுத் தம் ஆசானின் வரவை உடனே சுல்தானுக்குத் தெரியப்படுத்தினர். அதுகேட்ட சுல்தான் மகிழ்ச்சி மீக்குற்று தம் ஆசானின் ஆசானை வரவேற்க தம் அமைச்சர் பெருமக்களுடன் கிளம்பிவிட்டார். அவரின் பின்னே டில்லி மாநகரமே திரண்டு சென்றது.

தம் ஆசானை நன்முறையில் வரவேற்றுத் தம் தவமடம் கொண்டு வந்து சேர்த்த குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், பின்னர் இருவரும் தனியே அமர்ந்திருக்கும் பொழுது, தம் ஆசானை நோக்கி, ''ஷைகு அவர்களே! எவ்வித முன்னறிவிப்புமின்றி தாங்கள் திடீரென இங்கு எழுந்தருளிய அலுவல் யாதோ?'' என்று வினவினர். அப்பொழுது அவர்கள் தம்

அருகே இருந்த உழவரைச் சுட்டிக்காட்டி, 'இவருக்கு இங்கு சுல்தானிடம் ஓர் அலுவல் இருந்தது. அதன் காரணமாக நானும் இங்கு வந்தேன்'' என்று கூறினர். ''இதற்காகத் தாங்கள் இத்துணைச் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லையே. தங்களின் மாணவர் ஒருவர் மூலமாக இச் செய்தியைத் தாங்கள் சுல்தானுக்குத் தெரியப்படுத்தின் அது முடிந்துவிடுமே'' என்று கூறினர்.

அதற்கு காஜா அவர்கள், ''நீர் சொல்வது சரியாயிருக்கலாம். ஆனால் ஓர் இறை நம்பிக்கையாளர், வறுமையிலும், அவமானத்திலும் மூழ்கி இருக்கும் பொழுதுதான் அவர் இறையருளுக்கு அண்மையிலுள்ளார். இந்த உழவர் என்னை அணுகித் தம் அவல நிலையை எடுத்துரைத்த பொழுது, சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்த நான், அவருக்காக இறைவனிடம் இறைஞ்சினேன். ஆனால் பேரருளாளனாகிய இறைவனோ, ஒருவரின் துன்பத்திலும், துயரத்திலும் பங்கு கொள்வதும், ஒருவகை வணக்கமே யாகும் என்று எனக்கு அறிவுறுத்தினான். எனவே அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி நான் இப் பயணத்தை மேற்கொண்டேன்'' என்று பகர்ந்தனர். இதன்பின் என்ன? இச்செய்தியைக் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் சுல்தானுக்குத் தெரிவிக்க, அடுத்தகணம் ஆவன செய்யப் பட்டது. அதுகண்டு உழவரின் அகமும், முகமும் ஒருங்கு சேர்ந்து மலர்ந்தன.

காஜா தங்கியிருந்த தவமடத்திற்கு மக்கள் அணியணியாக வந்து, அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றனர். டில்லியிலுள்ள முஸ்லிம்களில்- ஆண், பெண், சிறுவர், சிறுமியர் அனைவரும் அவர்களைத் தரிசிக்க, அந்தத் தவமடம் வந்து போயினர்- ஒருவரைத் தவிர, அந்த ஒருவர் யார்? அவர் தாம் ஷைகுல் இஸ்லாம் நஜ்முத்தீன் சக்ரா.

இதனை அறிந்த காஜா அவர்கள், நஜ்முத்தீன் சக்ராவைக் கண்டு வர அவரின் இல்லம் சென்றனர். அப்பொழுது நஜ்முத்தீன் சக்ரா, காஜா அவர்களை ஏறிட்டுப் பார்க்கவோ, முகமன் கூறி வரவேற்கவோ செய்யாது, தம் வீட்டு நிர்மாண வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந் தார். அதுகண்ட காஜா அவர்கள், அவரை அணுகி, ''என்ன நஜ்முத்தீன் சக்ரா! தாங்கள் மனம் நோவும்படி நான் ஏதேனும் தங்களுக்குத் தீங் கிழைத்து விட்டேனா? அல்லது ஷைகுல் இஸ்லாம் பதவி தந்த மயக்கத்தால் பழைய நட்பை அறுத்தெறிந்துவிட்டீர்களா?'' என்று வினயமாக வினவினர்.

காஜா அவர்களின் இச் சொல் அவரின் இதயத்தில் ஈட்டிபோல் பாய, அவர் தன்னுணர்வு பெற்று காஜா அர்களை வரவேற்று, உபசரித்ததோடு தம் தவற்றிற்கு அவர்களிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். அதன்



பின் அவர் காஜா அவர்களை நோக்கி ''நான் முன்பு போன்று தங்களின் மீது ஆழிய அன்புதான் கொண்டுள்ளேன். ஆனால், தங்களின் சீடர் குத்பு சாஹிப் இங்கு இருக்கும் வரை, எனக்கு மதிப்பேது? நான் பெயரளவில் தான் ஷைகுல் இஸ்லாமாக இருக்கிறேன்'' என்று தம் மனக்குறையை எடுத்துரைத்தார்.

அதுகேட்ட காஜா அவர்கள், புன்முறுவல் தம் முகத்ததிலே தவழ, ''என்ன நஜ்முத்தீன்! இதற்காகவா வருந்துகிறீர்கள். விடுங்கள் உங்களின் கவலையை, நான் அஜ்மீர் திரும்பும் பொழுது, உங்களின் கவலைக்குக் காரணமான குத்பு சாஹிபையும், என்னுடன் அழைத்துச் செல்கின்றேன்'' என்று கூறினர்.

காஜா அவர்கள் இவ்வாறு கூறியது நஜ்முத்தீன் சக்ராவின் வயிற்றில் பால் வார்த்தது போன்றிருந்தது. உடனே அவர் காஜா அவர்களை உணவுண்டு விட்டுச் செல்லலாமென்று உபசரிக்க, காஜா அவர்களோ, மறுத்து தவமடம் மீண்டனர். உடனே குத்புத்தீன் (ரஹ்) அவர்களை அழைத்து ''உம்முடைய பேரையும், புகழையும், பெருவாழ்வையும் கண்டு சிலர் புழுங்குகின்றனர். எனவே என்னுடன் அஜ்மீர் வந்து, என் ஆசனத்தில் அமரும். அப்பொழுது உமக்கு ஊழியம் செய்ய எனக்கும் வாய்ப்புக் கிடைத்ததாக இருக்கும்'' என்று கூறினர். அது கேட்டுப் பெரிதும் திடுக்குற்ற குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், காஜா அவர்களை நோக்கி, ''தங்களின் முன் நிற்கக் கூடத் தகுதி பெற்றிராத எனக்குத் தங்களின் ஆசனத்தில் அமர அருகதை ஏது? தாங்கள் இட்ட பணியைத் தலைமேல் தாங்கிச் செயலாற்றக் காத்துள்ளேன்'' என்று வினயமாகக் கூறினர். அடுத்தகணம் அவர்கள் தம் ஆசானுடன் அஜ்மீர் புறப்படுவ தற்கான ஆயத்தங்களைச் செய்யத் துவங்கிவிட்டார்கள்.

இச் செய்தி காட்டுத் தீ போல் நொடி நேரத்தில் டில்லி மாநகரம் முழுவதும் பரவியதும், மக்களுக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கும், ஏக்கத் திறகும் அளவில்லை. தலை விரிகோலமாய் அவர்கள் தவமடத்திற்கு ஓடோடி வந்து அதனை அன்பு முற்றுகையிட்டனர். அவர்கள் சிந்திய கண்ணீர்த் துளிகள் தவமடத்தின் வாசல்படிகளை நனைத்தன. இச் செய்தி சுல்தானின் செவிப்போந்ததும், அவரும் தவமடம் வந்து காஜா அவர் களைச் சந்தித்து, ''அடிகளீர்! தாங்கள் குத்பு சாஹிப் அவர்களைத் தங்களுடன் அஜ்மீருக்கு அழைத்துச் செல்லாதீர்கள். குத்பு சாஹிப் அவர்கள் டில்லி மாநகரம் தவம் செய்து பெற்ற நற்பேறு. அவர்களின் காலடி மண்ணே டில்லி மாநகர மக்கள் தங்கள் தலைமீது கொள்ளும் பூவாரம். அவர்களை எங்களை விட்டும் பிரித்துவிடாதீர்கள். எங்கள் மீது இரங்குங்கள். இரங்குங்கள்'' என்று நீர் மல்கும் கண்களுடன் வேண்டி நின்றார்.

அது கண்டு காஜா அவர்களின் மனமும் இரங்கியது. தம் அருகே அமர்ந்திருந்த குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''பாபா குத்பு! நான் இங்கு குழுமியிருக்கும் ஆயிரமாயிரம் மக்களின் உள்ளங்களையும், புண்படுத்த விரும்பவில்லை. நீர் இங்கேயே தங்கியிருந்து, மக்களுக்கு அறிவுரை, ஆன்மீக போதம் வழங்கி வாரும். இந் நகரை நான் உம்முடைய பாதுகாவலில் விட்டுச் செல்கிறேன்'' என்று அருள்வாய் மலர்ந்துவிட்டு, அஜ்மீர் புறப்பட்டனர். அப்பொழுது மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியும், துக்கமும் போட்டியிட்டுக் கொண்டு மோதின. குத்பு அவர்கள் தம்முடனே இருக்கப் போவதை எண்ணி மகிழ்ச்சி! காஜா அவர்கள் தம்மை விட்டுப் பிரிகின்றார்களே என்று துக்கம்!!

டில்லியைத் தம்முடைய ஆன்மீக அரசு பீடமாகக் கொண்டு வாழத்துவங்கிய குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், பெரும்பாலும் வாய்மூடி மௌனமாகவே இருந்து வந்தார்கள். அக்காலை அவர்களின் உள்ளம் முழுவதும் இறைத்தியானத்தில் இலயித்திருக்கும். தம் சூழ்நிலையையே அவர்கள் மறந்து விடுவார்கள். மக்கள் அவர்களின் தரிசனத்திற்காக வந்து [illegible]திருக்கிறார்கள் என்று ஊழியர் வந்து மெதுவாகக் கூறியதும், அவர்கள் தியானம் கலைந்து கண்களை விழித்துப் பார்ப்பர். அப்பொழுது மரியாதையுடன் தம் முன் கைகட்டி நிற்கும் ஊழியரை நோக்கி, வந்திருப்போர்களுக்கு அருந்துவதற்குத் தண்ணீர் கொடுக்குமாறு கூறுவர். அதன்பின் வெளியே வந்து மக்களுக்கு தரிசனம் அளித்துச் சில அறிவுரை பகர்ந்து விட்டு, மீண்டும் தவமடம் புகுந்து தியானத்தில் ஈடுபட்டு விடுவர்.

அவர்கள் இருபது ஆண்டுகளாக உறங்கவோ, பாயில் படுக்கவோ செய்யவில்லை. எப்பொழுது பார்த்தாலும், இறைத் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் அவர்கள், தொழுகை நேரம் வந்ததும் தியானம் கலைந்து, உளூவுடன் தாம் இருப்பினும், மீண்டும் ஒரு முறை உளூ செய்து தொழுவர். அதன்பின் என்ன? மீண்டும் தியானம் தான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அளவற்ற அன்பு செலுத்திய அவர்கள், நாளொன்றுக்கு மூவாயிரம் ஸலவாத் வீதம் ஓதி வந்தனர். ஓரிரவு அவர்கள் கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்களைத் தரிசித்த பொழுது தாம் எவ்வளவோ முயன்றும் குர்ஆன் முழுவதையும் தம்மால் மனனம் செய்ய இயலவில்லை என்பதை அழுகையுடன் எடுத்துரைத் தனர். அதுகேட்ட அண்ணலார் சூரா யூசுஃபை அதிகமாக ஓதி வருமாறு பணித்தனர். அவ்விதமே அவர்கள் செய்ய, திருக்குர்ஆன் முழுவதும் அவர்களுக்கு விரைவில் மனனமாகி விட்டது.

இதன்பின் அவர்கள் நாளொன்றுக்கு இரு தடவை, இரவில் ஒரு தடவையும், பகலில் ஒரு தடவையும் குர்ஆனை ஓதி முடித்தனர். அதில்



அச்சுறுத்தும் வசனங்கள் வருந்தொறும் வருந்தொறும், தம் மார்பிலே அடித்துக் கொண்டு மயங்கி வீழ்ந்து விடுவார்கள். ரஹ்மத்துடைய வசனங்கள் வருந்தொறும், வருந்தொறும் புளகாங்கித முற்றுப் பூரித்துத் திளைப்பார்கள். அப்பொழுது அவர்கள் தம்மை அறியாமல் சில பார்ஸி பைத்துகளையும் படிப்பார்கள்.

சிலபொழுது அவர்கள், 'ஸம்அ' என்னும் பேரின்ப இசை நிகழ்ச்சி யிலும் கலந்து சொக்கி மகிழ்வர். அதில் 'மஹ்பூப்' (காதலன்) என்ற சொல் வரும்பொழுது, அவர்கள் அமைதி இழந்தவர்களாய் பெரும் சப்தமிட்டுத் தம் தலையைத் தரையிலே கொண்டு போய் மோதிக் கொள்வார்கள். அப்பொழுது அவர்கள் அல்லாஹ்வின் நினைவேயன்றி, வேறோர் நினைவும் இல்லாதவர்களாய், தம்மை மறந்த நிலையில் விளங்குவர்.

அவர்கள் தொடர்ந்து நோன்பு நோற்று வரும் வழக்கத்தை மேற் கொண்டிருந்தனர். அவர்கள் பகலில் நோன்பு நோற்பதையும், இரவில் தொழுவதையும் தங்களின் நீங்காத வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் பிரயாணத்தில் இருக்கும்பொழுதும் இந்த வழக்கத்தை விடுவதில்லை.

ஒரு தடவை அவர்கள் பள்ளிவாயிலில் இக்திகாஃப் இருந்தனர். அப்பொழுது ஓரிரவு, இரண்டு ரகஅத்துகளில் இரண்டு தடவை குர்ஆனை ஓதித் தொழவேண்டுமென்று அவர்களும், ஹமீதுத்தீன் நாகூரியும் பத்ருத்தீன் கஸ்னவீயும் முடிவு செய்தனர். ஹமீதுத்தீன் நாகூரி இமாமாக நின்று தொழ வைத்தார். அவ்வாறே தொழுது முடிந்ததும் ''இறைவனே! எங்களால் உன்னைப் பரிபூரணமாகத் தொழ இயலாது. எனவே எங்களை மன்னிப்பாயாக!'' என்று இறைஞ்சினார்கள் அவர்கள்.

காஜாவின் ஆன்மீக மகவாகிய அவர்கள், தம் ஆன்மீகத் தந்தை போன்றே பிரபல்யத்தை வெறுத்தனர். எனவே மூலையில் ஒதுங்கி வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும் தம், ஆன்மீக மாணவர்களைப் பிரபல்யத்தை விரும்பவேண்டாமென்றும், ஏனெனில் பிரபல்யம் பெறுவது ஃபக்கீர்களைப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கிவிடும் என்றும், ஆன்மீகப் பாதையில் செல்வோர், தம்மைத்தாமே மறைத்துக் கொள்வது வணக்கங்கள் நிகழ்த்துவதைவிட மேலானதாகும் என்றும் நவின்றனர்.

மேலும் அவர்கள் கூறினார்கள் :

''உண்மையான சூஃபி எவரெனில், அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு எவருடனும் தொடர்பு கொள்ளாது ஒதுங்கி இருப்பவர் தாம். அவருடைய சொல்லும் செயலும், இறை மறைக்கும் நபி வழிக்கும் ஒத்ததாக இருக்க

வேண்டும். தம்மை தர்வேஷ் என்று கூறிக்கொண்டு, செல்வர்களுடையவும், அரசர்களுடையவும் தொடர்பைப் பெற முயன்று கொண்டிருப்பவர், உண்மையான தர்வேஷ் ஆகார். எவர் அல்லாஹ்வை உணர்ந்து கொண்டாரோ, அவர் பொது மக்களைவிட்டும் வெருண்டோடுவார். அவர் எவரோடும் உரையாட மாட்டார். ஆன்மீகத்தின் உயரிய படித்தரத்தை எய்தப் பெற்றவர்களுக்கு இவ் உலகிலேயே இடமில்லை''

''உலகாயுத மக்களுடன் தொடர்பு கொள்வது பக்கீர்களின் இதயங்களை அமைதியற்றதாக்கி விடுகிறது. உலகத்துடனும், உலகாயுத மக்களுடன் நட்புக் கொள்வதே எல்லாவிதத் தீமைகளுக்கும் ஆணி வேராகும். உலக ஆசையை விட்டவர், விண்ணகம் வாழும் அமரர்களுக்கு நிகரானவராவர். உலக ஆசையில் மூழ்கித் திளைப்பவன், தன்னையே தான் நாசப்படுத்திக் கொண்டவனாவான். அவன் அதிகமதிகமாக மூழ்க, மூழ்க, அவன் அல்லாஹ்வை மறந்து, அல்லாஹ்வில் நின்றும் தூரமாகிக் கொண்டே உள்ளான். அல்லாஹ்வை மறந்தவன், உண்மையில் இறந்தவனேயாவான். ஒருவன் அல்லாஹ்வை மறக்கும் பொழுது, அவனுடைய இதயம் கறுத்துவிடுகிறது. அவ்வாறு இதயம் கறுமை எய்தி விடுவதே அதனுடைய இறப்பாகும்.

''ஆன்மீகத்தின் நேரிய பாதை, எப்பொழுதும் இதய விழிப்போடு இருப்பதுதான். மார்க்கத்தில் விலக்கப்பட்ட உணவுகளைத் தவிர்ந்து, உலகாயுத மக்களுடன் தொடர்பற்று இருக்கும் பொழுதுதான், ஒருவனுக்கு இது சாத்தியமாகும். இல்லையெனில் இல்லை.''

அவர்கள் இறைக் காதலைப் பற்றிக் கூறும் பொழுது, ''உண்மையான நட்பு, ஒருவன் தன் காதலிக்கு விசுவாசமாக இருப்பதும், தன் காதலியை வருத்தமுறச் செய்யக் கூடிய எந்த அலுவலையும் செய்யாதிருப்பதுமாகும்'' என்று எடுத்துரைத்தார்கள்.

பண்டு தொட்டு ஆன்மீக அறிஞர்களுக்கும், மார்க்க அறிஞர்களுக்கும் இடையேயுள்ள கருத்து வேறுபாடு பற்றி அவர்கள் தம் கருத்துத் தெரிவிக்கும்பொழுது, ''அவ் இருவருக்கும் இடையே ஒற்றுமை ஏற்பட இயலாது. ஆன்மீக அறிஞர்கள் பெறும் அறிவோ, இறைக் காதலால் (இஷ்கால்) ஏற்படுவதாகும். மார்க்க அறிஞர்கள் பெறும் அறிவோ, புத்தியால் (அக்லால்) பெறப்படுவதாகும். இஷ்குக்கும், அக்லுக்கும் இடையே உடன்பாடு கிடையாது'' என்று இயம்பினர்.

ஒரு தடவை அவர்கள், இறைநேசச் செல்வர்களின் மாண்பினைப் பெரிதும் புகழ்ந்துரைத்தனர். அப்பொழுது அவர்கள், ''ஒருவன் ஆயிரம் ஆண்டுகள் தியானத்திலும், வணக்கத்திலும் ஈடுபட்டிருப்பதைவிட,



இறைநேசச் செல்வர்களுடன் நட்புறவுடன் இருப்பது மேலானதாகும். எனவே அவர்களின் மாண்பினைப் பற்றி எடுத்துரைப்பது நல்லார் ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்'' என்று நவின்றனர்.

மேலும் அவர்கள் கூறினார்கள் :

''தொழுகையே வணக்கங்களிலெல்லாம் மேலானதாகும். அதுவே அல்லாஹ்வால் பெரிதும் விரும்பக் கூடியதாகும். தொழுகையில்தான் ஒருவன் அல்லாஹ்வின் அண்மையில் வருகிறான். அதுவே முஃமின்களின் மிஃராஜ் ஆகும். அதுவே மார்க்கத்தின் தூணாகும். அதனை ஜமாஅத்தோடு தொழுவது வாஜிப் ஆகும்.

''ஆன்மீக வழியில் அடியெடுத்து வைத்து நடப்பவர்களுக்கு தஹஜ்ஜுத் தொழுகை இன்றியமையாததாகும். அது அவர்களை ஆன்மீக வழியில் முன்னே இழுத்துச் செல்கிறது.

''நோன்பு நோற்றல் முக்கியமான வணக்கங்களில் ஒன்றாகும். அது அல்லாஹ்வுக்கும், அடியானுக்கும் இடையேயுள்ள இரகசியமாகும். அது ஒருவனின் நஃப்ஸையும், இதயத்தையும் கட்டுப்படுத்துகிறது. இறையச்சம் இன்றித்தொழும் தொழுகையை விட இறைவனுக்காக நோன்பு நோற்று, பட்டினியாக இருப்பது எழுபது மடங்கு மேலானதாகும்.

''ஒருவன் நோன்பு நோற்குங்கால் அவனுடைய கண்கள், காதுகள், கைகள், கால்கள், மூக்கு ஆகிய அனைத்தும் நோன்பு நோற்க வேண்டும். சிலர் நோன்பு நோற்கிறார்கள் தாம். எனினும் அதனால் அவர்கள் எவ்விதப் பலனும் எய்தப் பெறுவதில்லை. அவர்கள் உண்மையில் நோன்பு நோற்கவில்லை; வெறுமனே பட்டினி கிடக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

''இஸ்லாத்தின் தூண்களில் 'ஹஜ்'ஜும் ஒன்றாகும். ஹஜ்ஜு செய்ய வசதியுள்ளவர்களுக்கு அது கடமையாகும். ஹஜ்ஜு செய்ய வசதி இருந்தும் ஹஜ்ஜு செய்யாதிருப்பவன் யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ இறப்பானாக! என்னும் கருத்துப்பட அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஹதீது ஒன்று உள்ளது.

''திக்ருகளில் மேலானது திருக்குர்ஆனை ஓதுவதேயாகும். ஏனெனில் ஒருவன், திருக்குர்ஆனை ஓதுகின்றான் என்றால், அது அவன் அல்லாஹ்வுடன் உரையாடிக் கொண்டிருக்கிறான் என்றுதான் பொருள்.

''ஒருவன் அல்லாஹ்வை அடைய விரும்பின், அவன் அப்பாதையில் முஜாஹிதா (முயற்சி) செய்ய வேண்டும். அண்ணல் நபி

(ஸல்) அவர்கள், தம் முன்பின் பாவங்கள் பொறுக்கப்பட்டவர்களாகவும், இறைவனின் 'ஹபீப்' (நேசர்) ஆகவும் இருந்த போதினும், இரவில் தம் கால்கள் வீங்கும் வண்ணமும், தம் கால் பெருவிரல்கள் மரத்துப் போகும் வண்ணமும் நின்று தொழுதார்கள். எனவே நபிமார்களின் வாரிசுகளான வலிமார்கள், அவர்களைப் பின்பற்றி முஜாஹிதாவில் ஈடுபட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் 'விலாயத்'தை எய்தப் பெறுவார்கள்.''

இவ்வாறு மணி மணியான கருத்துக்களை உதிர்த்த அவர்கள், ஒரு ஷைகு எத்தகைய பண்புகளை உடையவராக இருக்க வேண்டுமென்று கூறும்பொழுது, ''அவர் குறைவாக உண்ண வேண்டும். குறைவாக உறங்க வேண்டும். குறைவாகப் பேசவேண்டும். குறைவாக மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்'' என்றும் கூறிவிட்டு ஷிப்லி (ரஹ்) அவர்கள் கண்ட ஓர் உண்மையான ஷைகைப்பற்றி எடுத்துரைக்கிறார்கள்.

ஒரு தடவை ஷிப்லி (ரஹ்) அவர்கள் தம் பயணத்தின் போது ஓர் இறைநேசச் செல்வரைச் சந்தித்து, அவருடன் சில நாட்கள் தங்கியிருந்தனர். அந்த இறைநேசச் செல்வரோ ஆண்டு முழுவதும் நோன்பு நோற்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அவர் நோன்பு திறப்பதற்கு விண்ணிலிருந்து இரண்டு ரொட்டிகள் வந்து கொண்டிருந்தன. அவற்றில் ஒன்றை அவர் உண்டு விட்டு மற்றொன்றை அவர் ஷிப்லி (ரஹ்) அவர்களுக்குக் கொடுத்து வந்தார்.

அவர் அரசரிடம் நூறு 'கான்காஹ்'களை நிர்மாணிக்குமாறு கூற, அவ்விதமே நிர்மாணித்தார் அரசர். அந்த 'கான்காஹ்'களுக்கு உணவு எடுத்துச் செல்லும் ஊழியர்கள், தம் அலுவல் முடிந்ததும், அவரின் முன் வந்து அமர்வர். அவர், அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுவார். அவரின் இறைஞ்சுதலின் காரணமாக, அந்த நூறு பேர்களும் 'வலி'மார் களாகி விட்டனர்.

இது கண்டு பெரிதும் வியப்புற்ற ஷிப்லி (ரஹ்) அவர்கள், இதுபற்றி அவரிடம் வினவியபொழுது, ''ஆம்; ஓர் உண்மையான ஷைகு, தம்முடைய முரீதின் கையைப் பிடித்ததும், அந்த முரீது ஒரு 'வலி'யாக ஆகிவிடுகிறார்'' என்று பதிலிறுத்தார் அவர். இதனை முழுக்க முழுக்க ஆமோதிக்கும் குத்புத்தீன் (ரஹ்) அவர்களும் ''இத் தகு ஆற்றலைப் பெற்றிராதவர், உண்மையான ஷைகு ஆகமாட்டார். அவர் பொய்யரே அன்றி வேறில்லை'' என்று புகன்றார்கள்.

இவ்வாறு புகன்றுவிட்டு, கஸ்னியில் தாம் சந்தித்த மற்றோர் இறைநேசச் செல்வரைப் பற்றியும் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத் தார்கள்.



அவர் திருமணமாகாதவர். அவர் வேண்டிய அனைத்தும் மறைவான உலகத்திலிருந்து அவருக்குக் கிடைத்து வந்தன. அவற்றை அவர் ஏழை, எளியவர்களுக்கு அறம் செய்து வந்தார். அவரின் தவமடம் வரும் எவரும் வெறும் வயிற்றுடன் திரும்பிச் செல்வதில்லை. ஒருநாள் அவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, தாம் நாற்பது ஆண்டுகளாக இறைத் தியானத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், எனினும் போதிய ஆன்மீக ஆற்றலைப் பெறவில்லை என்றும் கூறி வருந்தினார். இதன்பின் அவர் தம்முடைய ஊண், உறக்கம், உரையாடல் ஆகியவற்றை எல்லாம், பெரிதும் குறைத்துக் கொண்டு, மக்களை விட்டும் ஒதுங்கி வாழலானார். விரைவில் அவருக்கு ஆன்மீக சித்தி ஏற்பட்டது. இறைவனின் அர்ஷை எவ்விதத் தங்கு தடையுமின்றி நேரடியாகவே தரிசிக்கும் நற்பேற்றினைப் பெற்றார். அந்நாளிலிருந்து அவர் முப்பது ஆண்டுகளாக, எவருடனும் ஒரு சொல்லேனும் உரையாடவே இல்லை.''

இதனைக் கூறிய குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக மாணவர் பாபா ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்களின் பக்கல் திரும்பி, ''நீரும் அவ்விதமே செய்தாலொழிய, உண்மையான தர்வேஷாக இயலாது'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

மேலும் அவர்கள் கூறுகிறார்கள் :

''நான் ஓர் ஊருக்குச் சென்ற பொழுது, இறையடியார்களில் சிலர் தன்னை மறந்து மயங்கிய நிலையில் இருப்பதைக் கண்டேன். தொழுகைக் கான நேரம் வந்ததும், அவர்கள் தன்னுணர்வு பெற்று 'உளூ'ச் செய்து தொழுவார்கள். அதன்பின் மீண்டும் தன்னுணர்வற்ற நிலையில் ஆகி விடுவார்கள். ஒரு தடவை அவர்கள் தொழுது முடித்ததும், அவர்களை அணுகி, அவர்கள் தன்னுணர்வற்ற நிலையில் இருப்பதற்கான காரணத்தை வினவினேன். அதற்கு அவர்கள், 'நாங்கள்' இப்லீஸ், இறை ஆணைப்படி ஆதம் (அலை) அவர்களுக்கு, 'சுஜூது' செய்யாததன் காரணமாக, இறை முனிவுக்கு ஆளானான் என்ற செய்தியை, எழுபது ஆண்டுகளுக்கு முன் அறியலானோம். அதனால் ஏற்பட்ட இறையச்சமானது எங்களை இந் நிலையில் ஆக்கிவிட்டது' என்று அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

''நான் சமர்க்கந்த் சென்றிருந்த பொழுது, மற்றொரு இறை நேசரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் தொழுகை நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் கண்மூடித் தம்மை மறந்த நிலையில் இருந்தார். 'எத்தனை ஆண்டுகளாக அவர் இவ்வாறு இருக்கிறார்?'' என்று அங்கிருந்தோரிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள், ''நாங்கள் அவரை இருபது ஆண்டுகளாக இந்நிலையிலேயே பார்த்து வருகிறோம்'' என்று பதிலிறுத்தார்கள். அவரிடம் அதற்கான காரணத்தை, எவ்வாற்றானும் விசாரித்தறிய

வேண்டுமென்ற ஆவலுடன் அங்கேயே பல நாட்களாகக் காத்திருந்தேன். ஒருநாள் அவர் தொழுகை நேரத்தில், கண்களைத் திறந்ததும், நான் அவரை அணுகி 'ஷைகு அவர்களே! தாங்கள் தன்னை மறந்த தவயோக நிலையில் இருப்பதற்கான காரணம் யாது?' என்று வினவினேன்.

''அதுகேட்ட அவர், ''ஓர் அடியான் இறைக் காதலில் மூழ்கித் திளைக்கும் பொழுது, அவன் தன்னையும், தன் சூழலையும் மறக்கிறான். அப்பொழுது அவனை வாளால் கண்ட துண்டமாக வெட்டினும், அதனை அவன் உணரமாட்டான். இந்த இறைக்காதல் மிகவும் அபாயம் நிறைந்ததாகும். உயிரைப் பணயம் வைத்தே அதில் அடியெடுத்து வைத்து நடந்து செல்ல வேண்டும் என்றார்.''

இந் நிகழ்ச்சியைக் கூறிய பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் மாணவர்களை நோக்கி, ''அல்லாஹ்வின் ஆசைப் பாதையில், ஆன்மீகப் பாதையில் அடியெடுத்து வைத்து நடப்பவர்கள், பல்வேறு அல்லல்களுக்கு, சோதனைகளுக்கு ஆளாக வேண்டும். அல்லாஹ்வின் நேசத்தைப் பெற்றுவிட்டதாகக் கூறும் ஒருவர், தமக்குத் துன்பம் நேரிடும் பொழுது, அதற்காக முனகவோ, முணுமுணுக்கவோ கூடாது. அவ்விதம் செய்யின் அவர் அல்லாஹ்வை உண்மையாக நேசிப்பவரேயல்லர். பொய்யரேயாவார். சோதனையின்றேல் சாதனை இல்லை என்பதை நினைவிலிறுத்துங்கள்'' என்று அறிவுரை பகர்நதர்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள் :

''ஒரு தடவை நானும், காஜி ஹமீதுத்தீன் நாகூரியும் ஓர் ஊருக்குச் சென்றோம். அங்குப் பன்னிரண்டு இறைநேசச் செல்வர்கள் இருந்தனர். அவர்கள் பிரமித்த நிலையில் இருந்தனர். கண்கள் மட்டும் அகல விரிந்து இருந்தன. தம்மையும், தம் சூழலையும் மறந்திருந்தார்கள். தொழுகை நேரம் வந்ததும் தன்னுணர்வு பெற்று உளூச் செய்து தொழுது விட்டு மீண்டும் முன் நிலையில் ஆகிவிடுவார்கள்.''

இவ்வாறு கூறிய குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் மாணவர் ஃபரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்களை நோக்கி, ''நபிமார்கள் அனைவரும், மஃசூம் (பாவமற்றவர்)களாவர். வலிமார்கள் அனைவரும் மஹ்ஃபூள் (தவறுகளை விட்டும் காக்கப்பட்டவர்)களாவர். எனவே தான் அவர்கள், தம்மை மறந்த மயக்க நிலையிலும், ஷரீஅத்துக்கு மாற்றமாக நடக்கமாட்டார்கள்; தொழுகையை விடமாட்டார்கள்'' என்று எடுத்துரைத்தனர்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் மேலும் தொடர்ந்தார்கள் :



நானும், என் ஆன்மீக ஆசான் காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களும், ஓராண்டு 'ஹஜ்'ஜு செய்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். வழியில் ஒரு குகையில் ஒரு பெரியாரைச் சந்தித்தோம். அவரோ மெலிந்து துரும்பாகக் காணப்பட்டார். பிரமை பிடித்தவர்களுக்குப் போன்று கண்கள் அகல விரிந்திருந்தன. சில நாட்கள் அங்குத் தங்கி இருந்து விட்டுச் செல்லலாமென்று காஜா கூறினார்கள். நானும் அதற்கு இணங்கினேன். ஏறத்தாழ ஒரு மாத காலம் நாங்கள் அங்குத் தங்கி இருந்து, அவருக்கு ஊழியம் செய்து கொண்டிருந்தோம்.

ஒரு நாள் அவர் திடீரெனத் தன்னுணர்வு பெற்றார். அப்பொழுது நாங்கள் அவரை அணுகி, 'ஸலாம்' உரைத்தோம். எங்களுடைய ஸலாத்திற்கு பதில் கூறிய அவர், ''நீங்கள் இதுகாறும் எனக்கு செய்து வந்த ஊழியங்களுக்கு, அல்லாஹ் அருள்பாலிப்பானாக!'' என்று கூறிவிட்டு, 'தர்வேஷ்'களுக்கு ஊழியம் செய்பவர், வாழ்வில் உயரிய படித்தரத்தை எய்தப் பெறுவார்' என்று கூறினார்.

''மேலும் அவர் எங்களை நோக்கி, 'நான் ஷைகு முஹம்மது அஸ்லம் தூஸி (ரஹ்) அவர்களின் வழிவந்தவன். நான் இந் நிலையில் முப்பதாண்டுகளாக உள்ளேன். என் இரவு, பகல் எவ்வாறு கழிகின்றன என்று எனக்கே தெரியாது. உங்களுக்காகவே இறைவன் என்னை இன்று தன்னுணர்வு பெறச் செய்துள்ளான் போலும்! நல்லது. நீங்கள் இவ் இடத்தை விட்டும் செல்லலாம்' என்று கூறி விட்டு, எங்களுக்காக இறைவனிடம் இறைஞ்சினார்.''

''அதன்பின் அவர் எங்களை நோக்கி, ''நான் இப்பொழுது கூறப் போவதை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உலகப்பற்றை வெறுத்துத் தள்ளுங்கள். மக்களை விட்டும் ஒதுங்கியிருங்கள். உங்களுக்குக் கிடைக்கும் பொருள்களை, உங்களுக்காக மட்டும் செலவழிக்காதீர்கள். அவ்விதம் செய்வீர்களாயின், உங்களால் ஆன்மீக ஞானத்தின் படித்தரங்களை எய்தப் பெற இயலாது போய்விடும். இவ் உலகில் அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் தேடி அலையாதீர்கள்'' என்று அருளுரை பகர்ந்து விட்டுத் தம்மை மறந்த நிலையிலானார் அவர்.

மற்றொரு நிகழ்ச்சி :

''ஒரு தடவை நானும் ஹமீதுத்தீன் நாகூரியும், கஃபாவைச் சுற்றி வரும் பொழுது எங்களுக்கு முன்னால், ஷிப்லீ (ரஹ்) அவர்களின் வழிவந்த ஷைகு உதுமான் என்னும் பெரியார் சுற்றி வருவதைக் கண்டு, அவரின் பாதச் சுவடுகளிலே நாங்களும் அடிவைத்து நடந்து சுற்றினோம். அதனை உணர்ந்து கொண்ட அப் பெரியார், எங்களை நோக்கி, 'இதனால்

உங்களுக்கு யாதொரு பலனும் ஏற்படப் போவதில்லை. பலன் பெற விரும்பின், நான் மறைவாகச் செய்யும் வணக்கமுறைகளைப் பின் பற்றுங்கள்' என்று கூறினார். 'அவை யாவை கூறுங்கள்; செய்கிறோம்' என்று நாங்கள் வினயமாக எடுத்துரைத்தோம்.

''அதற்கு அவர், 'நான் ஒவ்வொரு நாளும் ஆயிரம் தடவை குர்ஆனை முடிக்கிறேன்' என்று கூறினார்.

''அவரின் பதில் எங்களைத் தூக்கி வாரிப்போட்டது. ஆயிரம் தடவையா! இஃது எவ்வாறு சாலும்? ஒரு வேளை, இவர்கள் குர்ஆனின் ஒவ்வொரு அத்தியாயத்தின் துவக்கத்தைத் தான் ஓதுகின்றார்களோ, என்னவோ என்று எணணிணனோம்.

''இதனை உள்ளுணர்வால் விளங்கிக் கொண்ட அவர், 'வீண் ஐயம் கொள்ளாதீர்கள். நான் குர்ஆனை ஒவ்வொரு எழுத்தாக ஓதியே நாளொன்றுக்கு ஆயிரம் தடவை ஓதி முடிக்கிறேன்' என்று கூறினார். இதற்கு மேல் எங்களுக்குப் பேச வாயில்லை.

''பின்னர் நாங்கள் இதனைச் சிலரிடம் எடுத்துரைத்த பொழுது, மௌலானா அலாவுத்தீன் கிர்மானீ, எங்களின் ஐயத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார். 'இறைநேசச் செல்வர்களின் 'கராமாத்' என்னும் இயற்கைக்கு மாற்றமான செயல்களை, உங்களின் பகுத்தறிவால், பகுத்தறிய முற் படாதீர்கள். மனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்டதே கராமாத் ஆகும். அறிவுக்கும், அதற்கும், எவ்விதத் தொடர்புமில்லை' என்று கூறினார்'' என இயம்பினார்கள்.

தம் ஞானாசிரியரான காஜா முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களைப் பற்றி குத்புத்தீன் அவர்கள் கூறும் பொழுது, ''நான் என் ஞானாசிரியரின் ஊழியத்தில் பல்லாண்டுகள் இருந்தேன். எனினும், அவர்கள் ஒரு தடவையேனும் தங்களின் மஹ்பூபாகிய அல்லாஹ்வின் இரகசியத்தை எவரிடமும் வெளிப்படுத்தியதை அறியேன். அவர்கள் இவ்வாறு செய்ததற்குக் காரணம், அவர்கள் அல்லாஹ்வைப் பற்றிய இரகசியத்தை, அதிகமதிகமாக அறிய விரும்பியதேயாகும். அவனிடம் தாம் கண்ட இரகசியத்தை வெளிப்படுத்தின், மேற்கொண்டும் தன் இரகசியத்தை அல்லாஹ் தமக்கு வெளிப்படுத்தாதிருந்து விடுவானோ என்று அவர்கள் அஞ்சினார்கள். மன்சூர் ஹல்லாஜ் ஞானப்பாட்டையில் சம்பூரணம் பெற்றிருப்பின், அவர், தாம் அல்லாஹ்வைப் பற்றி அறிந்த இரகசியத்தை வெளிப்படுத்தியிருக்கவே மாட்டார். அவர் தாம் கண்ட இரகசியத்தின் சின்னஞ்சிறு பகுதியை வெளிப்படுத்தியதன் காரணமாக, அவர் தம் உயிரையே இழக்க வேண்டியதாயிற்று'' என்று எடுத்துரைத்தார்கள்.



மேலும், அவர்கள் தம் ஞானாசிரியரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவர்கள் துவக்கத்தில் ஒவ்வோராண்டும் மக்கா சென்று, 'ஹஜ்'ஜு செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள், ஆன்மீகப் பாட்டையில் உச்சமான படித்தரத்தை எய்திய பொழுது, அவர்கள் ஒரே பொழுதில் அஜ்மீரில் இருப்பதையும், அதே பொழுதில் மக்காவில் கஃபாவைச் சுற்றி வருவதையும் மக்கள் கண்டுள்ளார்கள். பின்னர் மக்கள் அவர்களை ஒவ்வோர் இரவும், மக்கா சென்று கஃபாவைச் சுற்றி வருவதையும், வைகறையில் அஜ்மீரில் ஃபஜ்ர் தொழுகை தொழுவதையும் கண்டுள்ளார்கள் என்றும் அவர்கள் இயம்பினர்.

ஒரு தடவை அவர்கள் தம் சீடர்களுடன் உரையாடிக் கொண் டிருக்கும் பொழுது, ''தன்னுடைய அருள் நேசர்கள் எங்கிருந்த போதினும், அவர்களைப் போய் சுற்றி வருமாறு கஃபாவிற்கு அல்லாஹ் கட்டளை பிறப்பிக்கிறான்'' என்று கூறினர். அடுத்கணம் அவர்கள் தன்னுணர்வற்ற நிலையில் எழுந்து நின்றனர்.

மேற்கொண்டும் என்ன நிகழ்ந்தது என்பதை இதோ பாபா பரீத் கூறுகின்றார்கள். நாமும் கேட்போம்.

''நானும் அப்பொழுது பிரமை உற்றவனாக ஆகிவிட்டேன். அங்கு கூடியிருந்தோர் அனைவரும் உணர்ச்சி வசப்பட்டவர்களாக 'தக்பீர்' கூறலாயினர். அவர்களின் உடலிலிருந்து இரத்தம் கசிந்து வழிந் தோடித் தரையில் விழுந்து, 'அல்லாஹு அக்பர்' என்று பொறிக்கப்பட்டது போன்று அமைந்தது.

''சற்று நேரத்தில் நாங்கள் தன்னுணர்வு பெற்ற பொழுது கஃபா எங்களின் முன்னே வந்து நிற்பதைக் கண்டோம். நாங்கள் எங்களின் கண்களை அகலமாக விரித்துப் பார்த்தோம். ஆம்; அது கஃபாவே தான். குத்பு சாஹிப் அவர்களும் நாங்களும், கஃபாவைச் சுற்றி வந்தோம். அப் பொழுது அசரீரி ஒன்று, ''எம்முடைய நேசர்களே! நாம் உங்களுடை யவும், உங்களைப் பின்பற்றுபவர்களுடையவும், ஹஜ்ஜையும் தவா பையும், தொழுகையையும், ஏற்றுக் கொண்டோம்'' என்று முழங்கியதைச் செவியுற்றோம்.''

ஆன்மீகப் பாதையில் பல்வேறு படித்தரங்களைக் கடந்த குத்புத்தீன் (ரஹ்) அவர்களும், அவற்றைப் பற்றிக் கூறும் பொழுது, ''அது 180 படித்தரங்களைக் கொண்டது என மெய்ஞ்ஞானிகளில் சிலர் கூறுகின் றனர். ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கும் அவர்களின் சீடர்களோ அது 100 படித்தரங்களைக் கொண்டது என்று இயம்புகின்றனர். அது 70 படித்தரங்களைக் கொண்டது என்று

துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்களும், 50 படித்தரங்களைக் கொண்டது என்று பிஷ்ர் ஹாபி (ரஹ்) அவர்களும் கூறுகின்றனர். அப்துல்லாஹ் இப்னு முபாரக் (ரஹ்), பாயஸீத் பிஸ்தாமி (ரஹ்), சுஃப்யான் தௌரீ (ரஹ்) ஆகியோரோ, அது 45 படித்தரங்களைக் கொண்டது என்று கருத்துக் கொண்டுள்ளனர். வேறு சிலரோ, அது 20 படித்தரங்களைக் கொண்டது என்று கூறுகின்றனர். சிஷ்திய்யா தரீக்காவினரோ, அது 15 படித்தரங்களைக் கொண்டதென்றும், அவற்றிற்குள் கஷ்பு, கராமாத் ஆகியவை அடங்கும் என்றும், எனினும் இந்தப் படித்தரங்களை எய்தப் பெற்றவர்கள், தங்களின் அபூர்வ ஆற்றலை வெளியில் காட்டமாட்டார்கள் என்றும் காட்டின் அவர்களின் ஆன்மீக முன்னேற்றம் தடைப்படும் என்றும் அவர்கள் கருதினார்கள்'' எனவும் எடுத்துரைத்தனர்.

இவ்வாறு அவர்கள் கூறியதோடு மட்டுமல்லாது, தங்களின் ஆன்மீக ஆற்றலை மறைக்க எவ்வளவோ முயன்றனர். எனினும் சிலபொழுது அவை வெளிப்படச் செய்தன.

ஒரு தடவை ஒரு மனிதர் அவர்களிடம் வந்து, தாம் பரம ஏழையென்றும், தம்மிடம் அரைக்காசேனும் இல்லையென்றும் கூறி, அவர்களிடம் உதவி வேண்டிய பொழுது, ''நீர் உம்முடைய இல்லத்தில் சேமித்து வைத்திருக்கும் எண்பது ரூபாயைச் செலவழித்து வந்தாலொழிய, உம்முடைய கூற்றை நான் ஏற்று உமக்கு உதவி செய்ய இயலாது'' என்று கூறிவிட்டார்கள். தம் குட்டு வெளிப்பட்டதை அறிந்த பொழுது, அவருடைய வாயிலிருந்து மறுவார்த்தை வெளிவரவில்லை.

மற்றொரு தடவை, இசை வாணர் ஒருவர் அவர்களிடம் வந்து, தம் அருமை மகள் பருவமெய்தியிருப்பதாசவும், அவளுக்கு மணமுடித்து வைக்கத் தம்மிடம் போதிய பணம் இல்லையென்றும், எனவே தமக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் வேண்டி நின்ற பொழுது, அதுகேட்டுப் பெரிதும் வருந்திய அவர்கள், ''என் செய்வது? என்னிடமும் உமக்கு உதவப் பணம் இல்லையே'' என்று கூறினர். ''அவ்விதமாயின் தங்களின் தவமடத்தின் ஒரு செங்கல்லையேனும் பெயர்த்துச் செல்ல எனக்கு அனுமதியளியுங்கள். நான் எவரிடமேனும் அதனைக் கொடுத்துப் பணம் பெற்று, என் மகளின் திருமணத்தை முடிக்கிறேன்'' என்று வினயமாகக் கூறிய பொழுது, அது கேட்டு முறுவலித்த அவர்கள் தம் இணக்கத்தைத் தெரிவித்தனர். என்ன வியப்பு! அவர் அடுத்த கணம் ஓடோடிச் சென்று தவமடச் சுவரின் ஒரு செங்கலைப் பெயர்த்ததும், அது செங்கலாக அல்ல செம்பொற்கட்டியாக அவரின் கையில் வந்தது. அதற்கு மேல் ஆசை உந்த அவர் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி மீண்டும் ஓர் செங்கலைப் பெயர்த்தெடுக்க அனுமதி வழங்குமாறு வேண்ட, அவ்வாறே அவர்களும்



அனுமதி வழங்கினார்கள். மீண்டும் அவரின் கரங்களில் செம்பொற்கட்டி பளிச்சிட்டது. மீண்டும் ஒரு கல்லை எடுக்க அவர் அனுமதி வேண்ட, அவர்கள் அனுமதி வழங்கினார்கள். மூன்று செம்பொற்கட்டிகளை எடுத்துக் கொண்டு, அவர் இல்லம் திரும்பிய பொழுது, அவரின் இல்லத்தில் மகிழ்ச்சி திருநடனம் புரிந்தது.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் ஆசானின் ஆணைப்படி, டில்லியில் வாழ்ந்து வரும் பொழுது, வாய்ப்புக் கிடைக்குந்தோறெல்லாம் அஜ்மீர் சென்று தம் ஆசானைக் கண்டு, அளவளாவி வரும் வழக்கத்தை மேற் கொண்டிருந்தார்கள். ஒரு தடவை அவர்கள் அஜ்மீர் சென்ற பொழுது, காஜா சாஹிப் அவர்கள் இறப்புப்பற்றித் தம் மாணவர் குழாத்திற்கு அறிவுரை பகர்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள், 'இறப்பின்றேல், இவ் உலகமே வாழ்வதற்குத் தகுதியற்ற இடமாக ஆகியிருக்கும்' என்று கூறினர். அதுகேட்ட மாணவர்கள் அதற்கான காரணத்தை வினவ, 'இறப்பு என்பது மனிதனை இறைவனுடன் இணைக்கும் பாலமாகும். அதனை நண்பன் கடந்துவிடின், அவன் தன் நண்பனின் அண்மையை எய்திவிட ஏதுவாகிறது' என்று அவர்கள் விளக்கம் பகர்ந்தனர்.

மேலும், அவர்கள் நட்பைப் பற்றி எடுத்துரைக்கும் பொழுது, ''நட்பு என்பது வாயால் உரைப்பதல்ல, உள்ளத்தால் உணர்வதாகும்'' என்று கூறினர்.

தொடர்ந்து அவர்கள் பேசும்பொழுது ''ஆரிஃப் (இறைவனை அறிந்தவர்) என்பவரைக் கதிரவனுக்கு நிகராகக் கூறலாம். அவருடைய 'நூர்' என்ற ஒளியினால் அகில உலகமும் ஒளிர்ந்து கொண்டுள்ளது'' என்று இயம்பினர்.

இவ்வாறு பேசிக் கொண்டே சென்ற அவர்கள், ''நான் அஜ்மீர் வந்து தங்கி வாழ்வதற்கான காரணம் நான் இங்கேயே இறப்பெய்தி அடங்கப் பெறுவதற்கேயாகும். இன்னும் சில நாட்களில் நான் இவ் உலகை விட்டு மறைந்து விடப் போகிறேன்' என்று கூறியதும், அவர்களின் ஆன்மீக மாணவர்களின் உள்ளங்கள் திடுக்குற்றன. கண்கள் குளமாயின.

இதன்பின் காஜா சாஹிப் அவர்கள், தம் சகோதரியின் மகன் ஷைகு அலீ சஞ்சரீயை நோக்கி, ''கிலாஃபத் நாமாவைத் தயார் செய்யும். அதனைக் குத்பு சாஹிப் டில்லிக்கு எடுத்துச் செல்லட்டும். நான் கிலாஃபத்தை குத்புத்தீனுக்கு வழங்குகிறேன். டில்லியே அவருடைய ஆன்மீகத் தலைநகராகும்'' என்று திருவாய் மலர்ந்தனர்.

கிலாஃபத் நாமாவைத் தயார் செய்து, அவர்களின் மருகர் கொணர்ந் ததும், அதனைப் பெற்று குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் கரங்களில்

ஒப்படைத்தனர் அவர்களின் ஆன்மீக ஆசான். அதனைப் பெற்று இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள். அதன்பின் அவர்களை அருகே அழைத்துத் தம் திருக்கரத்தால் தொப்பியை அவர்களின் தலையில் சூட்டி, அதைச் சூழத் தலைப் பாகையையும் அணிவித்தனர் காஜா சாஹிப். பின்னர் தம் ஆன்மீக ஆசான் உதுமான் ஹாரூனி (ரஹ்) அவர்களின் ஊன்றுகோலையும், தாம் வழக்க மாக ஓதி வந்த திருக்குர்ஆனின் பிரதியையும், தாம் தொழுது வந்த தொழுகை விரிப்பையும் அவர்களிடம் ஒப்படைத்து, ''பெருமானார் (ஸல்) அவர்களிலிருந்து வழிவழியாக வந்த அடைக்கலப் பொருள் என்னிடம் வந்துற்றதை, நான் இப்பொழுது உம்மிடம் ஒப்படைத் துள்ளேன். அவற்றைப் பேணுதலுடன் பாதுகாத்துப் பாங்குடன் செயலாற்றி வர வேண்டியது. மறுமையில் என் முன்னோர்களின் முன் நான் தலைகுனிந்திரா வண்ணம் நீர் நடந்து கொள்வீராக!'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

அவற்றைப் பெரிதும் தாழ்மையுடன் ஏற்றுக் கொண்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அவற்றைப் பெறும் பேற்றினைப் பெற்றதற்கு இறை வனுக்கு நன்றி செலுத்து முகத்தான், இரண்டு 'ரகஅத்' நஃபில் தொழுகை தொழுதனர்.

தொழுது முடித்ததும் காஜா சாஹிப் அவர்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, விண்ணை நோக்கிய வண்ணம் தம் தலையை உயர்த்தியவர்களாய் ''நான் உம்மை இறைவன் பால் ஒப்படைத்து விட்டேன். என் இடத்தில் நான் உம்மை அமர்த்தி விட்டேன்'' என்று கூறினர்.

அதன்பின் அவர்கள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களை நோக்கி, ''ஒரு தர்வேஷிடம் நான்கு விதப் பண்பாடுகள் அமைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். 1) அவர் செல்வரைப் போல் காட்சி வழங்க வேண்டும். 2) பட்டினியோடிருந்த போதினும், நன்கு உணவுண்டவர் போன்று தோற்றம் அளிக்க வேண்டும். 3) உள்ளத்தைத் துக்கம் கௌவிப் பிடித்திருந்த போதினும், முகமலர்ச்சியுடன் துலங்க வேண்டும். 4) பகைவருடனும் நட்புடன் இருக்க வேண்டும்'' என்று அவர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்.

இதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக ஆசானிடம் விடைபெறும் நோக்குடன், அவர்களின் செங்கமலப் பாதங்களைத் தொட்டு முத்தமிட எண்ணிய பொழுது, அவர்களின் உள்ளக்கிடக்கையை விளங்கிக் கொண்ட காஜா சாஹிப் அவர்கள், தம் மாணவரைத் தம் அருகே அழைத்தனர். அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆசானின்



பாதகமலங்களைத் தொட்டு முத்தமிட்ட பொழுது, அவர்களைத் தூக்கி நிறுத்திக் கட்டித் தழுவிய காஜா சாஹிப் அவர்கள், பாத்திஹா ஓதி, தாம் காட்டியருளிய பாதையிலிருந்து விலகிச் சென்று விட வேண்டா மென்றும், அதில் உறுதியாக இருக்குமாறும் அருளுரை பகர்ந்தார்கள்.

அது கேட்டு உணர்ச்சி மீக்குற்ற குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், மீண்டும் தம் ஆசானின் திருப்பாதங்களில் வீழ்ந்து முத்தியிட்ட பொழுது, அவர்களைத் தூக்கி நிறுத்தி, ஆரத்தழுவி ஆசீர்வதித்தனர் ஆசான்.

இதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் ஆசானிடம் பிரியாவிடை பெற்று டில்லி வந்து சேர்ந்து நாற்பது நாட்களேயாயின. அஜ்மீரிலிருந்து ஒரு தூதுவன் வந்து ஓர் ஓலையைக் குத்புத்தீன் (ரஹ்) அவர்களிடம் கொடுத்தான். அதில் பொறிக்கப்பட்டிருந்த செய்தி குத்புத்தீன் (ரஹ்) அவர்களைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது. அப்படி அதில் என்ன எழுதப்பட்டிருந்தது? ''தாங்கள் இங்கிருந்து புறப்பட்ட இருபதாம் நாள் காஜா-யெ-காஜா கான் முயீனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள், இவ் உலகு நீத்துவிட்டார்கள்'' என்ற வாசகம் கண்ணீரால் எழுதப்பட்டிருந்தது. அவ்வளவுதான்.

சிஷ்தி தரீக்காவின் அகில இந்தியக் கிலாஃபத் பதவி தம் தோள் மீது சுமத்தப்பட்டதை இப்பொழுதுதான் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் உண்மையில் உணர்ந்தார்கள். தம் ஆசான் தம் தோள் மீது அளப்பெரும் சுமையைச் சுமத்திவிட்டு, அவனி நீத்தது, அவர்களுக்கு அளவற்ற மன வேதனையை நல்கியது. இறையருளும், தம் ஆசானின் ஆசியும் தமக்கு உறுதுணையாக விளங்கும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் தம் ஆசான் காட்டிச் சென்ற அறவழியில், ஆன்மீக வழியில் தம் சீடர் குழாம் புடைசூழ அடியெடுத்து வைத்து நடந்து சென்றார்கள். இவ்வாறு பல்லாண்டுகள் உருண்டோடின. அவர்கள் 54 ஆவது மைல் கல்லை அடைந்ததும் தங்களின் இறுதி அண்மி விட்டது என்பதை உணர்ந்தார்கள்.*

ஒருநாள் குத்புத்தீன் (ரஹ்) அவர்களைச் சூழ ஹமீதுத்தீன் நாகூரி, மௌலானா ஷஹாபுத்தீன் ஔஷி, மஹ்மூது மொய்னா, காஜா தாஜுத்தீன் கஸ்னவீ முதலான பெரியார்கள் வீற்றிருந்த பொழுது, அவர்கள் ஞானப் பேருரை நிகழ்த்தினர். அது கேட்டுக் கூடியிருந்தோர் அனைவரும் தன்னுணர்வற்ற நிலையில், 'திக்ர்' முழங்கினார்கள். அவர்களின் ஒவ்வொரு மயிர்க்காம்பிலிருந்தும் இரத்தம் கசிந்து வழிந்தோடித் தரையிலே விழுந்து, 'சுப்ஹானல்லாஹ்' என்று எழுதப்பட்டது போன்று

* அவர்கள் இறக்கும் பொழுது அவர்களுக்கு வயது 40 என்றும் 100 என்றும் பல்வேறு விதமாகக் கூறப்படுகிறது.

உருப்பெற்றது. திக்ரு முடிந்து அவர்கள் அனைவரும் தன்னுணர்வு எய்தப் பெற்றதும், பாபா பரீதுத்தீன் கஞ்செ ஷகர் (ரஹ்) அவர்கள், தம் ஆசானிடமும், அங்கு வீற்றிருந்த அனைவரிடமும் விடைபெறுவதற்காக எழுந்து நின்றனர். அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், தம் ஆன்மீக மாணவரை நீர் மல்கும் கண்களுடன் நோக்கி, ''மௌலானா பரீத்! நீர் ஹான்ஸிக்குப் புறப்பட்டுவிட்டீர் என்பதை நான் அறிவேன்'' என்று கூறினர்.

தம் ஆசானின் மனநிலையை விளங்கிக் கொண்ட பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள், ''ஷைகு அவர்கள் ஆணையிடும் வண்ணம் செய்யக் காத்துள்ளேன்'' என்று வினயமாக எடுத்துரைத்தார்கள்.

அதுகேட்ட குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், ''புறப்பட்டுச் செல்லும். நான் என் செய்வது? நான் இறக்கும் பொழுது நீர் என்னுடன் இருக்கக் கூடாது என்பது அல்லாஹ் விதித்த விதியாக உள்ளது'' என்று கூறினர்.

அதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள், அங்கு குழுமியிருந்தோரை நோக்கி, பாத்திஹா ஓதுமாறு கூறினர். அவர்கள் பாத்திஹா ஓதி முடிந்ததும், ''நான் இப்பொழுது பரீதிற்காக 'துஆ' இறைஞ்சுகிறேன். நீங்கள் 'ஆமீன்' கூறுங்கள்'' என்று சொன்னார்கள்.

'துஆ' இறைஞ்சி முடிந்ததும், அவர்கள் தம்மிடமிருந்த தொழுகை விரிப்பையும், ஊன்றுகோலையும் பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்களிடம் ஒப்படைத்து, அந்தத் தொழுகை விரிப்பின் மீது இரண்டு ரகஅத் 'நஃபில்' தொழுமாறு பணித்தனர். அவர்கள் அவ்வாறே செய்து முடித்ததும், ''மௌலானா பரீத்! இன்னும் ஒருநாள் தங்கி என்னுடன் இருந்துவிட்டுப் புறப்படும்'' என்று திருவாய் மலர்ந்தனர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள்.

அதன்பின் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் ஆன்மீக மாணவரை நோக்கி, ''நான் என்னுடைய கிர்க்கா, தலைப்பாகை, பாதக் குரடுகள் ஆகியவற்றை ஹமீதுத்தீன் நாகூரியிடம் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றேன். நான் இறப்பெய்தி, ஐந்து நாட்களுக்குப்பின் நீர் இங்கு வரும் பொழுது, அவற்றை அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளும்'' என்று கூறினர்.

இச் சொற்கள் அவர்களின் திருவாயிலிருந்து உதிர்ந்த அடுத்த கணம், அங்கிருந்த அனைவரும் 'ஓ'வென்று அலறிவிட்டனர். பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்களும் துக்கம் தாள இயலாது விக்கி, விக்கி அழுதனர். அப்பொழுது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் மாணவரை நோக்கி, ''என் ஆசான் காஜா சாஹிப் அவர்களின் இறப்பு வேளையில் நான் அவர்களுடன் இருக்கவில்லை.'' என்று ஆறுதல் கூறிவிட்டு ''ஒரு முரீது தம்முடைய



பீருடைய வழிமுறையை அணுவத்தனையும் பிசகாது பின்பற்ற வேண்டும். இல்லையெனில் அவர், மறுமையில் தம்முடைய பீரின் முன்னிலையில் தலை கவிழ்ந்து, நிற்க வேண்டி ஏற்பட்டுவிடும்'' என்று கூறினர்.

அடுத்த நாள் அவர்கள் தம் மாணவரை நோக்கி, ''ஒரு பக்கீர் பற்றற்ற தன்மையை விரும்பின், அவர் உலகில் எதனையும் எய்தப் பெற ஆசைப் படக்கூடாது. அவர் அல்லாஹ்வின் அண்மையை எய்த விரும்பின், அவர் அதிகமான வணக்கங்களில் ஈடுபட வேண்டும். அல்லாஹ்வுக்கு அதிகமதிகமாக அஞ்சவேண்டும்'' என்று அறிவுரை பகர்ந்தார்கள்.

இவ்வாறு கூறிய அவர்கள், பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்களைத் தம்பால் இழுத்து ஆரத்தழுவி, 'ஹாதாபிராஃ பைனீ வபைனிக்க' (இன்றே நாம் இருவரும் பிரியும் நாள்) என்று கூறிவிட்டு, 'இனிமேல் நம்மிருவருக்கும் இடையே இவ் உலகில் சந்திப்பு இல்லை. நான் உம்மை அல்லாஹ்வின் பால் ஒப்படைத்து விட்டேன். ஒரு பக்கீர் என்னுடைய சகவாசத்தில் எதனை எய்தப் பெற வேண்டுமோ, அதனை நீர் ஏற்கனவேயே எய்தப் பெற்று விட்டீர்'' என்று கூறினர். இதுவே பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள் பற்றியவரையில் அவர்களின் ஆசானின் இறுதி உரையாக இருந்தது.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் ஷைகு அலீ சஞ்சாரி (ரஹ்) அவர்களின் தவமடத்தில் ஒரு பேரின்ப இசைப் பொழிவு நிகழ்ந்தது. அதற்கு குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் தோழர்களான ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்), பத்ருத்தீன் கஸ்னவீ (ரஹ்) ஆகியோர் புடை சூழ வருகை தந்திருந்தனர். அப்பொழுது இசைவாணர் ஒருவர், ஷைகு அஹ்மது ஜான் (ரஹ்) அவர்கள் எழுதிய பின்வரும் கருத்துப் பொதிந்த கண்ணிகளை மடக்கி மடக்கிப் பாடினார்.

''நாங்கள் எங்களின் நேசனின் விருப்பத்தின் முன்னால் தலை சாய்த்தோம். அவனுடைய வாளால் நாங்கள் வெட்டுண்டோம். வெட்டுண்ட அடுத்த கணம், நாங்கள் மீண்டும் உயிர் பெற்றெழுந்தோம். நாங்கள் மீண்டும் வெட்டுண்டோம். மீண்டும் உயிர்பெற்றெழுந்தோம். எங்களின் நேசனின் வாளால் வெட்டுறுவதற்காகவே நாங்கள் மீண்டும் மீண்டும் உயிர் பெற்றெழுந்து கொண்டிந்தோம்.''

இந்தக் கண்ணிகளைச் செவியுற்றதும் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் இறை காதலால் மூழ்கடிக்கப்பட்டு தன்னுணர்வற்ற பரசவ நிலையிலானார்கள். அவர்களை அந் நிலையிலேயே அவர்களின் தவமடத்திற்கு ஹமீதுத்தீன் நாகூரியும், பத்ருத்தீன் கஸ்னவீயும் கொண்டு வந்தனர். இசை

வாணரும் அவர்களைப் பின் தொடர்ந்தார். இரவு பகல் மூன்று நாட்கள் அந்த இரு கண்ணிகளையும் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தார். அதுகேட்டு குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் ஆனந்த பரவசத்தில் மூழ்கித் திளைத்தார்கள். தொழுகைக்கான நேரம் வந்த பொழுது, அவர்கள் தன்னுணர்வு பெற்று 'உளூ' செய்து தொழுதுவிட்டு, மீண்டும் மயக்க நிலையில் ஆகி விடுவார்கள்.

ஒரு தடவை இந் நிலையில் அவர்கள் பெருமூச்சு விடவும், வாய் விட்டு அலறவும் முற்பட்ட பொழுது, அவர்களின் அருகே வீற்றிருந்த ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள், அவர்களின் வாயைத் தம் கையால் பொத்தி, ''என்ன காஜா! இந்த உலகம் முழுவதும் எரிந்து சாம்பலாகிவிட வேண்டுமென்று தாங்கள் விரும்புகிறீர்களா? ஏற்கனவேயே தங்களின் உடல் முழுவதும் அல்லாஹ்வின் மீதுள்ள இஷ்க் (காதல்) என்னும் நெருப்பால் சுட்டெரிக்கப்பட்டுவிட்டது'' என்று அழாக்குறையாகக் கூறினர்.

இசைவாணர் முதற் கண்ணியைப் பாடிய பொழுது, அவர்களின் ஆன்மா அவர்களின் உடலைவிட்டு வெளியே வர, அதன் காரணமாக அவர்கள் பெரும்பாலும் உயிரற்ற நிலையிலானார்கள். அவர் இரண்டாவது கண்ணியைப் பாடும் பொழுது, அவர்கள் மீண்டும் உயிர் பெற்றது போன்று ஆனார்கள். அப்பொழுது அவர்களின் உடல் படும் பாட்டைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க அவர்களின் தோழர்களால் இயலவில்லை. எனவே அவர்கள், ஒரேயடியாக இறைவனை எய்தப் பெறட்டும் என்ற நோக்குடன் முதல் கண்ணியை மட்டும் திரும்பத் திரும்பப் பாடுமாறு, இசைவாணருக்கு ஆணையிட்டார்கள். அவரும் அவ்வாறே செய்து கொண்டிருந்தார். என்ன வியப்பு! சற்று நேரத்தில் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் உயிர் பொன்றியது. தம் நேசனின் வாளால் வெட்டப்பட்ட அவர்கள், மீண்டும் மீண்டும் அவனின் வாளால் வெட்டப் படுவதற்காக, மீண்டும் மீண்டும் உயிர் பெற்றெழுந்து, இறுதியாக அவனி எய்திவிட்டார்கள். இது நிகழ்ந்தது ஹிஜ்ரி 633 ரபீஉல் அவ்வல் 14-ஆம் நாள் சனிக்கிழமையிலாகும்.

இப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை பத்ருத்தீன் கஸ்னவீ (ரஹ்) அவர்கள் இதோ கூறுகின்றார்கள், நாமும் கேட்போம்.

''குத்பு சாஹிப் இறந்த இரவு, அவர்களின் கால்கள் என்னுடைய தொடை மீதும், அவர்களின் தலை ஹமீதுத்தீன் நாகூரியின் தொடை மீதும் இருந்தன. அவர்கள் ஒரு கணம் மயக்கம் நீங்கித் தெளிவு பெற்ற பொழுது, நாங்கள் இருவரும் அவர்களை நோக்கி, ''தாங்கள் எவரைத் தங்களின் கலீபாவாக நியமிக்கிறீர்கள்?'' என்று வினவினோம். அதற்கு



அவர்கள், ''நான் என்னுடைய ஷைகு, காஜா சாஹிப் அவர்களிடமிருந்து பெற்ற தலைப்பாகை, கிர்க்கா, தொழுகை விரிப்பு, பாதக்குரடுகள் ஆகியவற்றை, ஷைகு பரீதுத்தீனிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்று கூறிவிட்டு, மீண்டும் மயக்க நிலையிலாகி விட்டனர்.

அப்பொழுது என்னை ஒரு சிறு உறக்கம் ஆட்கொண்டது. அதில் நான் குத்பு சாஹிப் அவர்கள் விண்ணை நோக்கிப் பறந்து கொண் டிருப்பதைக் கண்டேன். அப்பொழுது அவர்கள் என்னை நோக்கி, 'பத்ருத்தீனே! இறைநேசர்களுக்கு இறப்பு என்று ஒன்றில்லை. அவர்கள் ஓர் உலகத்திலிருந்து மற்றோர் உலகத்திற்குச் செல்கின்றார்கள். அவ்வளவுதான்'' என்று கூறினர். திடுக்கிட்டு கண்விழித்தேன். குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தம் கண்களை இறுக மூடிக் கொண்டதைக் கண்டேன்.''

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் இறந்துவிட்ட செய்தி, நொடியில் டில்லி மாநகரம் முழுவதும் பரவியது. மக்கள் அலறித் துடித்த வண்ணம் அவர்களின் தவமடம் நோக்கி ஓடி வந்து, தங்களின் கண்ணீரை அவர்களின் காலடிகளில் காணிக்கையாக வைத்தார்கள்.

இதன்பின் அவர்களை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மளமளவென்று ஆற்றப்பட்டன. அவர்களின் புனித உடலம் குளிப் பாட்டிக் கஃபனிடப்பட்டு நல்லடக்கம் செய்வதற்காகத் திறந்தவெளி ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு வைக்கப்பட்ட பொழுது, காஜா ஷைகு அபூ ஸயீது (ரஹ்) அவர்கள் அங்குக் குழுமி இருந்த மக்களை நோக்கி, ''எவர் தம் வாணாளில் பாவங்களைச் செய்யாது, அஸர் தொழுகையின் சுன்னத் தொழுகையைத் தம் வாணாள் முழுவதும் விடாது தொழுது வந்தாரோ, அவரே தமக்கு 'ஜனாஸா' தொழுகை தொழ வைக்க வேண்டும் எனக் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் கூறிச் சென்றார்கள். அத் தகுதி பெற்றோர் எவரேனும் இங்கு இருப்பின், முன் வந்து, தொழுகைக்குத் தலைமை தாங்கி நடத்த வேண்டுகிறேன்'' என்று வினயமாகக் கூறினர். அதுகேட்டு அங்கு நின்று கொண்டிருந்த மார்க்க விற்பன்னர்களும், மாமேதைகளும் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்டு வெறுமனே நின்று கொண்டிருந்தனர். சில நிமிடங்கள் சென்றன. எங்கணும் சாவின் அமைதி நிலவியது. அப் பொழுது அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒருவர் முன் வந்து, நின்றார். அவரைக் கண்டதும் மக்கள் அவரை வியப்புக் கண்களுடன் ஏற இறங்கப் பார்த்தார்கள். அப்பொழுது அந் நல்லாரின் திருவாயிலிருந்து ''நான் என்னுடைய இரகசியத்தை வெளியிட விரும்பாத போதினும், குத்பு சாஹிபின் விருப்பத்திற்குத் தலை சாய்த்து அதனை நிறைவேற்ற முன் வந்துள்ளேன்'' என்ற சொற்கள் அட கத்துடன் வெளிவந்தன. அவர்

யார்? அவர் தாம் அரச உடையில் ஒளிந்துக் கொண்டிருந்த மாபெரும் இறைநேசச் செல்வர் சுல்தான் ஷம்சுத்தீன் அல்தமிஷ் ஆவார்.

தொழுகை முடிவுற்றதும், சுல்தானும் ஏனைய மார்க்க விற்பன்னர்களும், ஆத்ம ஞானிகளும் ஒருங்கு சேர்ந்து, குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் பூத உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டியை மென்மையுடன் தூக்கிக் குழியில் வைத்து நல்லடக்கம் செய்தனர்.

குத்புத்தீன் (ரஹ்) இறப்பெய்திய இரவு, ஹான்ஸியிலிருந்த அவர்களின் ஆன்மீக மாணவர் பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள் கனவொன்று கண்டனர். அதில் அவர்களின் ஆசான் திருத்தோற்றம் வழங்கி, டில்லி புறப்பட்டு வருமாறு ஆணை பிறப்பித்து விட்டு மறைந்தனர். ஆசானிட்ட ஆணையைத் தலைமேற்றாங்கி பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள், டில்லி செல்லும் பாட்டையிலே வந்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது டில்லியிலிருந்து வந்து கொண்டிருந்த தூதுவர் அவர்களின் முன் எதிர்ப்பட்டு, குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் நிர்யாணமடைந்த செய்தியைக் கூறியதும் ஆற்றொணாத் துக்கத்தில் ஆழ்ந்தனர் பாபா. அதன்பின் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு டில்லியை நோக்கித் துரிதமாக நடந்து சென்று, நான்காவது நாள், அதாவது குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் இறப்பெய்திய ஐந்தாவது நாள் டில்லி மாநகர் வந்து சேர்ந்தனர். சேர்ந்த அடுத்த கணமே அவர்கள், தம் ஆசானின் அடக்கவிடத்தைத் தரிசித்து அதனைத் தம் கண்ணீரால் நனைத்தனர்.

குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் இறுதியாகக் கூறிய வண்ணம், ஹமீதுத்தீன் நாகூரி (ரஹ்) அவர்கள், குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தந்த புனித கிர்க்காவையும் தலைப்பாகையையும், தொழுகை விரிப்பையும், பாதக் குரடுகளையும், பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்களிடம் ஒப்படைத்து, அவர்களை வாழ்த்தினார்கள். ஆசானின் புனிதப் பொருள்களைப் பெற்ற பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள், அந்தத் தலைப்பாகையையும் கிர்க்காவையும் அணிந்த வண்ணம், இறைவனுக்கு நன்றி செலுத்தும் முறையில், இரண்டு 'ரகஅத்' நஃபில் தொழுகை தொழுதனர். அதன்பின் தம் ஆசானின் தவமடம் சென்று, அங்கு அவர்கள் அமர்ந்திருந்த இடத்தில் போய் அமர்ந்தார்கள்.

டில்லி மாநகரில் சிஷ்தி தரீக்காவின் தலைமைப் பீடத்தில் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் வீற்றிருந்தது, அவர்களுக்குப் புது அனுபவமாக இருந்தது. பஞ்சாபில் அமைதியான சூழலில் வாழ்ந்த அவர்களுக்கு, டில்லி வாழ்க்கை, பரபரப்பு மிகுந்ததாக இருந்தது. அழைப்புக்கு மேல் அழைப்பு வந்து குவிந்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்கள், விருந்துண்பதற்காகவும், திகரு மஜ்லிஸில் கலந்து கொள்வதற்காகவும்,



அடிக்கடி வெளியே செல்ல வேண்டியிருந்தது. தனிமையையும், அமைதியையும் பெரிதும் விழைந்த அவர்களுக்கு, டில்லி வாழ்வு விரைவில் அலுப்பை நல்கியதில் வியப்பில்லை. எனவே, என்று மீள்வோம் ஹான்ஸிக்கு என்று அவர்கள் தம் உள்ளின் உள்ளே எண்ணிக் கொண்டிருந்தார்கள்; ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது அவர்களின் ஏக்கத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் முறையில், ஒரு சம்பவம் நிகழ்ந்தது. சர்ஹங்கா என்ற பெயருள்ள 'மஜ்தூப்' ஒருவர், பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்களுடன் டில்லி வந்திருந்தார். அவர் ஹான்ஸியில் பாபா அவர்களின் திருமுன் எப்பொழுதும் வீற்றிருக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். ஆனால், டில்லியிலோ பாபா அவர்களைச் சந்திக்க வந்த மக்களின் நெருக்கடியின் காரணமாக அவரால், அவ்விதம் செய்ய இயலாமல் போய்விட்டது. பாபா அவர்களின் திருமுன் செல்வதற்குக் கூட அவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது. ஒரு நாள் எவ்வாறோ உள்ளே நுழைந்துவிட்ட அவர், பாபா அவர்களின் பாதார விந்தங்களில் வீழ்ந்து, "ஹான்ஸியில் தங்களின் திருமுன் எப்பொழுதும் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்று வந்தேன். டில்லியிலோ தங்களின் திருமுகத்தைத் தரிசிப்பதற்குக் கூட எனக்கு அனுமதி மறுக்கப்படுகிறதே" என்று கூறிக் கண்ணீர் சிந்திக் கதறி அழுதார். அவரின் கண்ணீர் பாபா அவர்களின் இதயத்தை இளக வைத்தது. அக் கணமே அவர்கள் ஹான்ஸிக்குத் திரும்ப முடிவு செய்தார்கள். அது கேட்டு அங்கு குழுமி இருந்த மக்களுக்கு ஏற்பட்ட வியப்பிற்கும், திகைப்பிற்கும் அளவில்லை. அவர்கள் பாபா அவர்களை அணுகி, "தங்களின் ஞானாசிரியர் குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் தங்களைக் கலீபாவாகத் தேர்ந்தெடுத்து, இந்த ஆசனத்தையும் தங்களுக்கென நிர்ணயித்துள்ள பொழுது, தாங்கள் ஏன் ஹான்ஸிக்குத் திரும்ப எண்ணுகிறீர்கள்?" என்று வினயமாக வினவினர். அதற்கு பாபா அவர்கள் அளித்த ஒரே பதில் "நான் இங்கிருந்த போதினும் சரி, வேறு எங்கிருந்த போதினும் சரி, என் ஆசானின் ஆசி எனக்கு எங்கும் இருக்கும்" என்பதாக இருந்தது.

இன்று டில்லியிலுள்ள குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் அடக்கவிடம், அருளின் இருப்பிடமாக அமைந்துள்ளது. மக்கள் அருளும் ஆசியும் வேண்டி, அங்கு வந்து குழுமிக் கொண்டுள்ளனர். அவர்களின் அடக்க இடத்தைச் சூழச் சலவைக் கற்களாலான தடுப்பு அமைக்கப்பட்டுள்ள போதினும், அவர்களின் 'கப்ர் ஷரீப்' எளிமையுடன் காட்சி வழங்குகிறது. அதன் மீது அவர்களின் ஆன்மீக மாணவர் பாபா பரீதுத்தீன் (ரஹ்) அவர்கள் வைத்த ஒரு கூடை மண் அப்படியே உள்ளது. அதனை ஒழுங்கு படுத்தி சமப்படுத்த ஒருவரும் இதுவரையிலும் துணிவு பெறவில்லை.

அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் இடம் ஒரு தனி வரலாற்றைப் பெற்றுள்ளது. குத்புத்தீன் (ரஹ்) அவர்கள் நிர்யாணமடைவதற்குச் சில மாதங்களுக்கு முன், அவர்கள் தம் நண்பர்களுடனும், சீடர்களுடனும், ஈத்தொழுகையை நிறைவேற்றிவிட்டுத் திரும்பும் பொழுது, வழியில் ஓரிடத்தில் தங்கினர். அப்பொழுது அது மரம், செடிகள் அடர்ந்த காடாக இருந்தது. அங்கு யாதொரு அடக்க இடமும் இல்லை. அங்கு அவர்கள் சற்று அதிகமான நேரம் தங்கியிருப்பதைக் கண்ட அவர்களின் நண்பர்கள், ''இன்று ஈத் நாளாகும். தங்களின் தரிசனப்பேற்றிற்காக மக்கள் தங்களின் தவமடம் வந்து காத்திருப்பர்'' என்று நினைவுபடுத்திய பொழுது, ''நான் இங்கு வெறுமனே வீற்றிருக்கவில்லை. இங்கு நான் இறைநேசத்தின் வாடையை நுகர்கிறேன். எனவே தான் நான் இங்கு வீற்றுள்ளேன்'' என்று கூறி, அந் நிலத்தின் உரிமையாளரை அழைத்து வரச்செய்து, அதனை அப்பொழுதே விலைக்கு வாங்கி, ''நான் இறந்ததும், என்னை இங்கேயே நல்லடக்கம் செய்யுங்கள்'' என்று பணித்தார்கள்.

சுலைமான் (அலை) அவர்கள் தம் பரிவாரங்களுடன் விண்ணிலே பறந்து உலகை வலம் வந்து கொண்டிருந்த பொழுது, மண்ணகத்தின் ஒரு பகுதியில் ஒளிமயமான வானவர்கள் அணியணியாக இறங்கிக் கொண் டிருப்பதைக் கண்டதும், அதுபற்றி அவர்கள் விசாரித்தபொழுது, ''இது இறுதித் திருநபியாம் முஹம்மது (ஸல்) அவர்களின் அடி தழுவி நடந்த நல்லார் காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கி (ரஹ்) அவர்கள் நல்லடக்க மாகும் இடமாகும்'' என்று பதில் வந்ததாகவும் கூறப்படுகிறது.

குத்புல் அக்தாப், குத்புல் இஸ்லாம், மலிக்குல் மஷாயிஃ, சுல்தானுத் தரீக்கத், சிராஜுல் ஒளலியா, கலீபா அஃலம் குத்புத்தீன் (ரஹ்) அவர்களின் நினைவு விழா, அவர்களின் அடக்கவிடத்தில் ஆண்டுதோறும், ரபீஉல் அவ்வல் 13, 14 பிறைகளில் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அப்பொழுது அங்குப் பேரின்ப இசைப்பொழிவு நிகழ்த்தப் பெறுகின்றது.